அருமையான பற்கள் !



உங்கள் பற்கள் வருஷக்கணக்காக வசீகரத்தன்மையுடன் இருக்குமா?

பற்கள் விலை மதிக்கமுடியாத நகைகளைப் போன்றவை. அவை உங்கள் புன்முறுவலை அழகுபடுத்தவோ, கெடுக்கவோ செய்யலாம். ஈறு உபாதிகள் பற்களுக்கு தீங்கு விளைவிக்காமல் பார்த்துக்கொள்ளுங்கள். தவறாமல் எஸ். ஆர். டூத் பேஸ்டினால் சுத்தம் செய்தால் பற்கள் வெண்மையாகவும், ஆரோக்கியமான ஈறுகளில் உறுதியாகவும் விளங்கும்.

★பல் வைத்தியர்களால் ஈறு வியாதிகளுக்கு கையாளப்படும் ஸோடியம் ரிஸினோலியேட் என்னும் விசேஷ மருந்து சேர்ந்தது.



GSR 25-50 TM

D. & W. GIBBS LIMITED, LONDON, ENGLAND

எவருக்கும்
மிகப்பிரியமானது...எப்பொழுதுமே



நேர்த்தியான வாசனை, உயர் ரகம்— இவ்விரண்டு சிறந்த குணங்களால் எல்லோராலும் மிக விரும்பப்படும் அச்வினி மிட்டாய்கள், ஜனங்களிடையே சுயமாகவே நற்பெயர் சம்பாதித்துக் கொண்டாகிவிட்டன. எங்களது தொழிற்சாலையில் நாங்கள் டாப்பிகள், காராமல்கள், ஆஸிட் ட்ராப்புகள், கூடுதல் காரமான பெப்பர்மின்டுகள், முதலிய மிட்டாய் வகையறுக்கள் செய்வதில் ஓய்வொழிவின்றி வேலை செய்து வருகிறோம். எனினும், இம் மிட்டாய்களுக்குள்ள பெரும் கிராக்கியை எங்களால் சமாளிக்க முடிகிறதில்லை. வெகு சீக்கிரம், வெளி ராஜ்யத்திலிருந்து வரவழைத்த, பூராவும் சுயமாகவே இயக்கப்பெற்ற புதிய இயந்திரங்கள் மும்முரமாக வேலை துவக்கி வரும். அப்பொழுது, நீங்கள் அதிசயிக்கும்படியான இன்னுமெத்தனையோ தினுசு மிட்டாய்கள், அதிகம் இனிப்புவாய்ந்தவைகள் உங்களுக்குக் கிடைக்கலாகும்

அச்வினி

டாப்பிகள் (Toffees)—காரமல்கள்—அதிகப்படி காரமான பெப்பர்மின்டுகள்—பழவகைகளால் செய்யப்பட்ட பெப்பர்மின்டுகள்-காப் லாஸெஞ்சுகள்—ஜூஜூபுகள்—ஷுகர் கோடெட் பதாம், பிஸ்தாக்கள் — ஆஸிட் ட்ராப்ஸ் (Acid Drops) — ஐஸிங் ஷுகர் (Icing Sugar)

தி மஹாலக்ஷ்மி ஷுகர் மில்ஸ் கம்பெனி, லிமிடெட்.
ஹமீரா, கபூர்த்தாலா ஸ்டேட்.

பம்பாய், மதராஸ், கத்தியவார் மற்றும் தென் இந்தியாவுக்கு ஏஜண்டுகள் :
மெஸர்ஸ். ஜெபக்கர் பிரதர்ஸ் (இந்தியா) லிமிடெட்.,
21, லிங்க செட்டித் தெரு : தபால் பெட்டி 21, மதராஸ்.
ஷா துங்கி லீலாதர் பில்டிங், மட்டாஞ்சேரி ரோடு போஸ்டு, த.பெ. 47. கொச்சி

MA. 4639


லைப்பாய்
பழக்கத்தைக்கூட
அவள்
கற்றிருக்கிறாள்!
ஊசியால் தைக்கும் போதெல்லாம் பிரயோஜனமுள்ள ஒரு சிறு பெண்ணாவதற்கு அவள் கற்றுக்கொள்ளுகிறாள். நாள்தோறும் லைப்பாய் சோப்பை உபயோகிக்கும் பழக்கத்தை அவள் அறிந்திருக்கிறபடியால் ஆரோக்கியமுள்ள ஒரு சிறு பெண்ணாக அவள் வருவாளென்றும் தன் தாய்க்குத் தெரியும். ஆரோக்யத்திற்கும், பலத்திற்கும் கண்ணுக்குத் தெரியாத சந்துருவாகிய அழுக்கு அபாயத்திலிருந்து இப்பழக்கம் அவளைப் பாதுகாக்கிறது.
LIFEBUOY
SOAP
லைப்பாய் ஒரு நல்ல சோப்பைக் காட்டிலும் சிறந்தது.
அது ஒரு நல்ல பழக்கம்.
L. 83-62 TM
LEVER BROTHERS (INDIA) LIMITED

கல்கி பொருளடக்கம்

மலர் 5 இதழ் 37 | 1946 ஏப்ரல் 21 | வியஹ சித்திரை 9

"கல்கி"யில் வெளிவரும் கதைகளில் உள்ள பெயர்களும், சம்பவங்களும் கற்பனையே.

"முதல் இரண்டு தடவைகளில் தோல்வியாகிற காரியம் மூன்றும் முறையாக முயற்சி செய்தால் வெற்றியாகும்" என்பதாக இந்திய மக்களிடையே அநாதிகாலமாய் ஒரு நம்பிக்கை இருந்து வருகிறது.

இந்த நம்பிக்கைப்படி பார்த்தால் இன்னும் சில தினங்களுக்கெல்லாம் இந்திய தேசத்துக்குச் சுதந்திரம் கிடைத்தே தீரவேண்டும்.

காரணம், இந்திய தேசத்துக்குச் சுதந்திரம் கொடுப்பதற்காக பிரிட்டிஷ் சர்க்கார் ஏற்கெனவே இரண்டு தடவைகள் முயற்சி செய்துவிட்டு இப்போது மூன்றாவது தடவையாக மூன்று மந்திரிகளை அனுப்பி வைத்திருக்கிறார்கள்.



1942-ம் வருஷத்தில் முதல் தடவையாக ஸர் ஸ்டாபோர்ட் கிரிப்ஸ் இந்தியாவுக்குப் பறந்து வந்து தோல்வி அடைந்து ஊருக்குத் திரும்பினார். மறுபடியும், இரண்டாவது தடவையாகச் சென்ற வருஷம் வைஸ்ராய் வேவல் பிரபு லண்டனுக்குப் போய்விட்டுத் திரும்பி வந்தார். ஸிம்லாவில் வட்டமேஜை கூட்டி இந்திய தேசத்தின் சுதந்திரத்துக்கும் ஒரு பெரிய வட்டமாகச் சுழித்துக் காட்டினார்.

இப்போது மூன்றாவது தடவையாக பிரிட்டிஷ் மந்திரி சபையிலிருந்து மூன்று மந்திரிகள் வந்திருக்கிறார்கள். ஒருவர், இந்திய மந்திரி லார்டு பெதிக் லாரென்ஸ்; மற்றவர் பழைய கிரிப்ஸ் துரை; இன்னொருவர் ஏ. வி. அலெக்ஸாந்தர்.

இந்த மூன்று மந்திரிகளும் டில்லியில் வந்து தங்கி இந்தியாவின் முக்கிய அரசியல் கட்சித் தலைவர்களை யெல்லாம் கூப்பிட்டு அதிகாரத்தை இந்தியர்களின் கைக்கு மாற்றுவது பற்றிக் கலந்து பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

பூர்வாங்கப் பேச்சுகளெல்லாம் முடிந்து இரண்டாம் கட்டம் ஆரம்பமாவதற்கு முன்பாக ஈஸ்டர் விடுமுறையைக் குளிர்ந்த காஷ்மீர் பிரதேசத்தில் கழிக்கப் போகிறார்களாம்.

குளிர்ந்த பிரதேசத்தில் தங்கி, இந்த மும்மூர்த்திகளும் இந்தியாவின் நிலைமையை நின்று நிதானித்து நிர்ணயம் செய்யட்டும். வந்த காரியத்தை வெற்றிகரமாக முடிக்கட்டும்.

அடிமை இந்திய மண்ணில் காலடி எடுத்துவைத்த மும்மூர்த்திகளும் திரும்பிப் போகும்போது சுதந்திர மண்ணிலிருந்து குதூகலப் பிரயாணம் செய்யட்டும்.

கல்கி

மலர் 5 | தமிழ்த் திருநாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார் | இதழ் 37

என்ன சேதி?

என்ன வியாபாரம்?

இந்தியாவிலுள்ள வெள்ளைக்காரர்களின் மனப்பான்மை புதிய நிலைமைக்கேற்றாற்போல மாறி வருவது எல்லோருக்கும் தெரிந்த விஷயம்.

சமீபத்தில் மத்திய சட்டசபை ஐரோப்பியக் கட்சித் தலைவர் ஸ்ரீ கிரிப்பித்ஸ் பேசுகையில், "நாங்கள் வர்த்தகர்களாகவே வந்தோம். இனிமேலும் வர்த்தகர்களாகவே இருந்துவிட்டுப் போகிறோம்" என்று சொல்லியிருக்கிறார்.

அவர்கள் வர்த்தகர்களாக இந்தியாவில் இருப்பதைப் பற்றி யாருக்கும் ஒருவித மான ஆட்சேபணையும் இல்லை. ஆனால், அவர்கள் என்ன மாதிரியான வர்த்தகம் நடத்தப் போகிறார்கள் என்பதை நமக்குத் தெளிவாகத் தெரிவிக்க வேண்டியது அவசியமாகும். சென்ற நூற்றைம்பது வருஷ காலச் சரித்திரத்தை எடுத்துப் பார்த்தால், ஆங்கிலேயர்கள் இந்தியாவில் வகுப்புவாதம் என்னும் சரக்கைத்தான் அதிகமாக வியாபாரம் செய்து வந்திருப்பது தெரியவரும். அந்த வியாபாரத்துக்கு இனிமேல் இடம் இல்லை என்பதைக் கிரிப்பித்ஸும் அவருடைய மற்ற சகாக்களும் உணர வேண்டும்.

மற்றொரு வெற்றி

டில்லி ராஜாங்க சபைக்குச் சமீபத்தில் நடந்த உப தேர்தலில் ஸ்ரீமதி ராதாபாய் சுப்பராயன் 2427 வோட்டுகளைப் பெற்று அமோகமான வெற்றியை அடைந்திருக்கிறார் என்பதையறிந்து நாம் ஆச்சரியப் படவில்லை. ஆனால், அவரை எதிர்த்த அபேட்சகருக்கு 133 வோட்டுகள் எப்படிக் கிடைத்தன என்பதை நினைக்கும்போது தான் நமக்கு அளவு கடந்த ஆச்சரியம் உண்டாகிறது.



ஸ்ரீமதி ராதாபாய் சுப்பராயன்

ஸ்ரீமதி ராதாபாய் சுப்பராயன் அரசியல் அனுபவமும் சட்டசபை அனுபவமும் மிக்கவர். அவர் இந்திய சட்டசபையில் அங்கத்தினராக இருந்து ஜனங்களுக்குச் செய்த சேவை எல்லோருக்கும் நன்றாக ஞாபகம் இருக்கும். அப்படியிருக்கும் போது அவர் சமீபத்தில் நடந்த இந்திய சட்டசபைத் தேர்தலுக்குக் காங்கிரஸ் அபேட்சகராகத் தேர்ந்தெடுக்கப்படாதது பலருக்கு வியப்பை அளித்தது. மத்திய பார்லிமெண்டரி போர்டார் சரியான காரணத்துக்காகத்தான் அவரை அப்போது விட்டுவிட்டார்கள் என்று இப்போது தெரியவருகிறது. அதாவது சட்டசபை வேலையில் அவருக்குள்ள பழுத்த அநுபவத்தை முன்னிட்டு அவருக்கு ஒரு 'பிரமோஷன்' கொடுக்க வேண்டுமென்பது அவர்களுடைய உத்தேசம் என்று வெளியாகிறது. அதாவது கீழ் இந்திய சட்டசபையிலிருந்து மேல் இந்திய சட்ட சபைக்கு (அதாவது இராஜாங்க சபைக்கு) அவரை அனுப்பிவைத்திருக்கிறார்கள்! ரொம்ப சந்தோஷம்!

மூன்று விஷயங்கள்

சமீபத்தில் காந்திஜி வைசிராயுடன் நடத்திய கடிதப் போக்குவரத்தில் பிரிட்டிஷ் சர்க்கார் தங்களுடைய மன மாற்றத்துக்கு அறிகுறியாக இரண்டு காரியங்களைச் செய்ய வேண்டுமென்று கேட்டிருந்தார். அவற்றில் முதல் காரியமான அரசியல் கைதிகள் விடுதலை நடைபெற்று வருவது மகிழ்ச்சிக்குரிய விஷயமாகும். ஸ்ரீ ஜயப்பிரகாஷ் நாராயணனையும் டாக்டர் ராம் மனோகர் லோஹியாவையும் விடுதலை செய்யப்பட்டதை மிக முக்கியமாகக் குறிப்பிட வேண்டும்.





இரண்டாவது காரியமான உப்பு வரியை எடுக்கும் விஷயத்திலும் அவ்விதமே மகாத்மாவின் விருப்பத்தை இந்திய சர்க்கார் நிறைவேற்றுவார்கள் என்று நம்புகிறோம். அப்படிச் செய்தால் இந்திய அதிகாரவர்க்க சர்க்கார் தங்கள் அந்தியகாலத்தில் நல்ல பெயர் எடுக்கலாம்.

தீக்ஷிதர் திருவிழா


சின்னஞ் சிறு எட்டயபுரம் சமஸ்தானத்தின் மகாராஜா ரொம்ப ரொம்பப் பெரிய காரியங்களை யெல்லாம் செய்து கீர்த்தியைச் சம்பாதித்துக் கொண்டு வருகிறார். முதலில் மகாகவி பாரதியாருக்கு ஞாபகார்த்த மண்டபம் கட்டுவதில் மகாராஜா அளவற்ற உற்சாகம் காட்டினார்.


பிறகு தமது 32-வது பிறந்த தினத்தன்று சமஸ்தானத்துக்குச் சொந்தமான ஆலயங்களைச் சகல ஹிந்துக்களுக்கும் திறந்துவிட்டார்.

இப்போது மேற்படி சமஸ்தானத்தில் கர்நாடக சங்கீதத்தின் மும்மூர்த்திகளில் ஒருவரான ஸ்ரீ முத்துஸ்வாமி தீக்ஷிதரின் நூற்றுப் பதினோராவது பிறந்த தினம் வெகு விமரிசையாக மூன்று தினங்கள் கொண்டாடப்பட்ட செய்தி கிடைத்திருக்கிறது.


சென்ற 5-4-46 அன்று சங்கீத கலாநிதி ஸ்ரீ டி. எல். வெங்கடராமய்யர் தலைமை வகிக்க, சங்கீத கலாநிதி டைகர் வரதாச்சாரியார் விழாவை ஆரம்பித்து வைத்தார். தீக்ஷிதரின் ஜீவிய சரிதத்தையும், அவரது கீர்த்தனங்களின் அருமை பெருமைகளையும் ஸ்ரீ டி. எல். வெங்கடராமய்யர் எடுத்துக் கூறினார்.


7-4-46 அன்று எட்டயபுரம் ஏரிக் கரையில் தீக்ஷிதரின் அஸ்தி அடக்கமாகியுள்ள பிருந்தாவனத்தில் ஒரு ஞாபகார்த்த மண்டபம் கட்டுவதற்காக எட்டயபுரம் மகாராஜா அவர்கள் அஸ்திவாரக் கல் நாட்டியிருக்கிறார். இதுபோன்ற காரியங்களினால் கூடிய சீக்கிரத்தில் எட்டயபுரத்தின் கீர்த்தி எட்டுத் திசையிலும் பரவிவிடும் என்று தோன்றுகிறது.


ராஜாஜி தலைமைப் பதவி வேண்டாமென்று விலகிக்கொண்டபோது அதிகார வர்க்கம் ஆனந்தம்டைந்தது.


அரசியல் வாதிகள் ஆர்ப்பாட்டம் செய்தனர்.
சர்க்கார் மாளிகை
நான் மட்டுந்தான் தலைவர்
நான்தான் தலைவர்
நானே தலைவர்

நிகழ்ச்சிச் சித்திரம்





-உம்மன்



காங்கிரஸ் தலைவர்களின் கடைசி யோசனை.

புத்திமதியின் அர்த்தம் என்ன?

சென்னை மாகாண மக்களின் சார்பாகச் சென்னைச் சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் அங்கத்தினர்கள் 18உ வியாழக்கிழமையும் 19உ வெள்ளிக்கிழமையும் கூட்டம் கூடுகிறார்கள்.

தங்களுக்குள் ஒரு கட்சித் தலைவரைத் தேர்ந்தெடுப்பதற்காகக் கூடுகிறார்கள்.

இந்தக் காரியத்துக்கு இரண்டு நாள் கூட்டம் என்னத்திற்கு என்ற கேள்வி ஏற்படுகிறது.

உண்மையில், இரண்டு நாள் கூட்டம் தேவையில்லைதான்.

ஒரே நாளில் நீடித்த கூட்டம் நடப்பதற்குக்கூட அவசியமில்லை.

எவ்வித ஆலோசனை, புனராலோசனை, வாதப் பிரதிவாதங்களுக்கும் இடம் கிடையாது.

கூடியவுடனே பத்து நிமிஷ நேரத்துக்குள் ஏக மனதாகத் தீர்மானித்து நிறைவேற்ற வேண்டிய காரியம்.

பின்னர் இரண்டு நாள் கூட்டம் என்னத்திற்காகப் போட்டிருக்கிறார்கள்?

சென்னை மாகாணத்தின் கௌரவத்தைப் பங்கம் செய்வதற்கா?

தமிழ்நாட்டின் மானத்தைக் காற்றிலே பறக்க விடுவதற்கா?

தேச மக்களுக்குத் துரோகம் செய்வதற்கா?

காங்கிரஸின் மகா சபை வேரைக் கிண்டி வெந்நீரை விடுவதற்கா?

எதற்காக?

* * *

சென்னைக் காங்கிரஸ் பிரதிநிதிகள் கட்சித் தலைவராக யாரைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்பது பற்றிக் காங்கிரஸ் மகா சபையின் ஒப்பற்ற தலைவர்கள் தங்கள் புத்திமதியைச் சொல்லியிருக்கிறார்கள்.

"ராஜாஜியைத் தேர்ந்தெடுங்கள். அது தான் நாட்டின் நன்மைக்கு உகந்தது!" என்று உலகம் போற்றும் உத்தம புருஷரான காந்தி மகாத்மாவும், காங்கிரஸ் அக்கிராசனர் மௌலானா ஆஸாதும், மத்திய பார்லிமெண்டரி போர்டு தலைவர் சர்தார் வல்லபாய் படேலும் ஆலோசனை சொல்லியிருக்கிறார்கள்.

மேற்படி ஆலோசனையை அகில இந்திய காங்கிரஸ் காரியக் கமிட்டி ஏகமனதாக ஆமோதித்துத் தீர்மானம் செய்திருக்கிறது.

இவ்வளவு தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கும் புத்திமதியைப் பற்றி ஆலோசனை செய்வதற்கு என்ன இருக்கிறது?

அதை உடனே மனப்பூர்வமான உற்சாகத்துடன் ஒப்புக்கொள்வதைத் தவிர நமது காங்கிரஸ் பிரதிநிதிகள் செய்யக்கூடிய யோசனை வேறு என்ன இருக்கிறது?

மாபெரும் காங்கிரஸ் தலைவர்களின் புத்திமதியைப் புறக்கணித்து வேறு விதமாக முடிவு செய்யலாம் என்று உத்தேசமா?

அப்படியானால் அதற்கு என்ன அவசியம்? எதற்காகப் புறக்கணிக்க வேண்டும்? என்ன காரணத்தைக் கொண்டு புறக்கணிக்க முடியும்?

* * *

இப்போது எழுந்துள்ள பிரச்னை ராஜாஜி பிரச்னை அல்ல. சென்னை மாகாணத்திலுள்ள ராஜாஜி கோஷ்டிக்கும் ராஜாஜி எதிர்ப்புக் கோஷ்டிக்கும் நடக்கும் போராட்டமல்ல.

ராஜாஜி பிரதம மந்திரி பதவியை விரும்பவில்லை. அதைப் பற்றி எவ்வித சந்தேகமும் இருக்கக் கூடாதென்பதற்காகச் சட்ட சபைக்கே நிற்காமல் விலகிக்கொண்டு விட்டார்.

யுனிவர்ஸிடி தொகுதிக்கு அவர் பெயர் அங்கீகரிக்கப்பட்ட பிறகு 'வேண்டாம்' என்று அந்த ஸ்தானத்தை உதறித் தள்ளி விட்டார்.

கட்சிக் கூட்டம் 7உ சென்னையில் போடப்பட்டிருந்தபோது, சென்னையிலேயே இருக்கக் கூடாதென்று குற்றாலத்தில் நிம்மதியாக அருவி ஸ்நானம் செய்துகொண்டிருப்பதற்குச் சென்றார்.

தம்மைச் சேர்ந்தவர்கள் ஏதாவது 'குளறல்' செய்து வைக்கக் கூடாதென்பதற்காகவே அவர்களில் முக்கியமானவர்களை மதுரையில் சந்தித்து, தம் பெயரை எந்த நிலைமையிலும் பிரேரேபிக்க வேண்டாம் என்று கண்டிப்பாகக் கட்டளையிட்டு விட்டுச் சென்றார்.

அப்படிப் போனவரை ஸ்ரீ வல்லபாயும் ஆஸாதும் சேர்ந்து தந்தி அடித்து டில்லிக்கு வரவழைத்தார்கள்.

மற்ற சென்னைக் காங்கிரஸ் பிரமுகர்களையும் தருவித்தார்கள். கேட்க வேண்டியதையெல்லாம் கேட்டுப் பேச வேண்டியதையெல்லாம் பேசினார்கள்.

மூன்று மாகாணக் கமிட்டித் தலைவர்களும் காங்கிரஸ் அக்கிராசனர் ஆஸாதை ஏழு தரம் சந்தித்துப் பேசினார்கள். மகாத்மாவையும் வல்லபாயையும் அவர்கள் பலமுறை பார்த்துப் பேசினார்கள்.

இவ்வளவுக்கும் பிறகு இந்தியாவின் மாபெரும் தலைவர்கள் மூவரும் ராஜாஜியின் பெயரைச் சிபார்சு செய்திருக்கிறார்கள். காங்கிரஸ் காரியக் கமிட்டி அந்தச் சிபார்சுக்கு ஏகமனதாக ஒப்பம் வைத்திருக்கிறது.

ஆகவே இப்போதைய பிரச்னை ராஜாஜி பிரச்னையல்ல.

அகில இந்திய காங்கிரஸ் தலைவர்களுக்கும் சென்னை மாகாண காங்கிரஸ் கட்சிக்கும் இடையே எழுந்திருக்கும் பிரச்னை.

அந்த மாபெரும் தலைவர்களின் ஏகமனதான புத்திமதியை ஒப்புக் கொள்வதா, புறக்கணிப்பதா என்பதுதான் பிரச்னை.

* * *

அகில இந்தியத் தலைவர்கள் தக்கபடி யோசனை செய்யாமல் அவசரப்பட்டுத் தங்கள் புத்திமதியைச் சொல்லி விட்டார்களா?

ராஜாஜியின் 'பூர்வோத்தரம்,' அதாவது ராஜாஜி காங்கிரஸை விட்டு விலகித் தமது மாறுபட்ட அபிப்பிராயத்தை வற்புறுத்திப் போராடிய விஷயம் அவர்களுக்குத் தெரியாதா? பேஷாய்த் தெரியும்.

உண்மையில் ராஜாஜி அபிப்பிராய மாறுபாடு கொண்டதும் போராடியதும் அகில இந்தியத் தலைவர்களோடுதான்.

அவருடைய பாகிஸ்தான் பிரேரணை சம்பந்தமாக யாருக்காவது கோபமும் மனஸ்தாபமும் இருக்கவேண்டும் என்றால் அது மௌலானா ஆஸாது அவர்களுக்குத்தான்.

அவர் ஆகஸ்டு கிளர்ச்சியை எதிர்த்ததற்காக யாருக்காவது அதிருப்தி இருக்க வேண்டுமானால், அது சர்தார் வல்லபாய் பட்டேலுக்கும் மற்ற காரியக் கமிட்டித் தலைவர்களுக்குந்தான்.

ராஜாஜியின்மேல் ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றிருந்தால் அவர்கள் எடுத்திருப்பார்கள்.

அவரைக் காங்கிரஸை விட்டுத் தள்ள வேண்டும் என்றிருந்தால், அவர்கள் தள்ளி விட்டிருப்பார்கள்.

அப்படியெல்லாம் செய்வதற்குப் பதிலாக அவரைச் சென்னை மாகாணத்தின் பிரதம மந்திரியாக்க வேண்டுமென்று நமது மாபெரும் தலைவர்கள் பிடிவாதம் பிடித்து அதற்காகப் பெரும் பிரயத்தனம் செய்கிறார்கள்.

ஏன்?

ராஜாஜியின் பேரில் ஒரு குற்றமும் இல்லையென்று அவர்கள் நன்கு அறிந்திருப்பதினால்தான்.

ராஜாஜி கொண்ட அபிப்பிராய பேதங்களுக்கெல்லாம் ஓரளவு நியாயம் உண்டு என்பதை அவர்கள் பூரணமாக உணர்ந்திருப்பதினால்தான்.

தாங்கள் சிறையிலிருந்தபோது ராஜாஜி வெளியிலிருந்து தேசத்துக்கு அபாரமான சேவை செய்திருக்கிறார் என்பதை அவர்கள் மனப்பூர்வமாக அங்கீகரிப்பதினால்தான்.

* * *

சென்னை மாகாணத்திலும் தமிழ் நாட்டிலும் ராஜாஜிக்கு எதிராக நடந்த கிளர்ச்சியையெல்லாம் அவர்கள் அறிய மாட்டார்களா?

வெகு நன்றாக அறிவார்கள்.

திருச்செங்கோடு தேர்தலிலிருந்து தமிழ்நாட்டில் நடந்த கிளர்ச்சியையெல்லாம் அறிவார்கள். ஆந்திரக் காரியக் கமிட்டியின் ஆந்திரத் தீர்மானத்தையும் அறிவார்கள்.

இங்கிருந்து நாலு கோஷ்டிகள் அடிக்கடி சென்று அவர்களுக்குத் தெரியப்படுத்தியிருக்கிறார்கள்.

ஜனாப் ஆஸப் அலியும் ஸ்ரீ கிருபளானியும் நேரில் வந்து தெரிந்து கொண்டு போயிருக்கிறார்கள்.

மகாத்மா காந்தி தமிழ்நாட்டுக் 'கிளிக்'கைப் பற்றிச் சொன்னதன் பேரில் நடந்த ஆபாசக் கிளர்ச்சியையும் அவர்கள் அறிவார்கள்.

அப்படியிருந்தும் சென்னை மாகாணத்துக்கு ராஜாஜியே பிரதம மந்திரியாக வரவேண்டும் என்று அகில இந்தியத் தலைவர்கள் சிபார்சு செய்கிறார்கள்.

ஏன்? அப்படி என்ன அவர்களுக்கு ராஜாஜி விஷயத்தில் சிரத்தை வந்தது?

உண்மையில் ராஜாஜி விஷயத்தில் உள்ள சிரத்தையால் அவர்கள் இதைச் சொல்லவில்லை.

ராஜாஜி மேல் உள்ள அபிமானத்தால் ராஜாஜி வேண்டாத பதவியையும் பொறுப்பையும் அவர் மேல் திணிக்க ஆஸாது முதலியோர் விரும்பவில்லை.

சென்னை மாகாணத்தின் நன்மையில் அவர்களுக்கு உள்ள சிரத்தையினாலும்

காங்கிரஸின் நல்ல பெயரில் உள்ள சிரத்தையினாலும் தான் அவர்கள் அத்தகைய யோசனை சொல்கிறார்கள்.

இப்போதுள்ள நிலைமையில் சென்னை மாகாணத்தின் பிரதம மந்திரி பதவி வகிக்கத் தகுதியும் திறமையும் உடையவர் ராஜாஜி ஒருவர்தான் என்று உறுதி கொண்டிருப்பதினால்தான் அவர்கள் ராஜாஜியைக் கட்சித் தலைவராக தேர்ந்தெடுக்கும்படி சென்னைக் காங்கிரஸ் கட்சிக்குப் புத்திமதி கூறுகிறார்கள்.

* * *

ஆம்; அவர்கள் கூறியிருப்பது புத்திமதிதான்; ஆலோசனைதான்.

ஆனால் அத்தகைய மூன்று மாபெரும் தலைவர்கள் சொல்லி, காங்கிரஸ் காரியக் கமிட்டியால் ஒப்பம் வைக்கப்பட்ட புத்திமதியைத் தவிர்க்க முடியாத கட்டளை என்று ஏற்றுக் கொள்ளாதவர்கள் உண்மையான காங்கிரஸ் வாதிகளாயிருக்க முடியாது.

சென்னை மாகாணத்துக் காங்கிரஸ் பிரதிநிதிகளுக்கு நியாயமாகக் கொடுக்க வேண்டிய கௌரவத்தைக் கொடுத்து, ''நாங்கள் வற்புறுத்துவதற்காக நீங்கள் செய்ய வேண்டாம். நல்ல காரியத்தை, சரியான காரியத்தை, நீங்களாகவே செய்யுங்கள்!'' என்று காங்கிரஸ் அக்கிராசனர் சொல்கிறார்.

அந்தப் பெரிய மனிதர் அவ்வளவு மரியாதைக்காரராயிருப்பதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை.

அது காரணமாக எவ்வளவோ தீர்க்காலோசனைக்குப் பிறகு காங்கிரஸ் தலைவர்கள் கூறியுள்ள புத்திமதியைப் புறக்கணிக்கச் சென்னைக் காங்கிரஸ் பிரதிநிதிகளுக்கு உரிமை ஏற்பட்டு விடாது.

தவறான பாதையிலிருந்து சரியான பாதைக்குத் திரும்பக் காங்கிரஸ் பெருந்தலைவர்கள் ஒரு கௌரவமான வழியைக் காட்டுகிறார்கள் என்றுதான் சொல்ல வேண்டும்.

தங்களுடைய புத்திமதியைப் புறக்கணிப்பதாயிருந்தால், ''உங்கள் சொந்தப் பொறுப்பில்'' தலைவரைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளும்படி மௌலானா ஆஸாத் கூறியிருப்பதின் அர்த்தம் என்ன?

''எங்கள் புத்திமதியைப் புறக்கணித்தால் அதன் பலாபலன்களை நீங்கள் அனுபவிக்க வேண்டியிருக்கும்'' என்று அர்த்தம்.

''தேசத்தை நாசம் செய்யாதீர்கள்!'' என்று அர்த்தம்.

''நாட்டைக் காட்டிக் கொடுக்காதீர்கள்!'' என்று அர்த்தம்.

''எச்சரிக்கை! எச்சரிக்கை! எச்சரிக்கை!'' என்று மூக்காலும் எச்சரிக்கை செய்வதாக அர்த்தம்.

* * *

மேலேயிருந்து கட்டளை பிறப்பிப்பது மாகாண கௌரவத்துக்குக் குறைவு என்றும், ஜனநாயகத்துக்கு விரோதம் என்றும் சொல்வதெல்லாம் அர்த்தமற்ற அனர்த்தப் பேச்சு.

சென்னைக் காங்கிரஸ் பிரதிநிதிகள் ஒரு விஷயத்தை ஞாபகப்படுத்திக் கொள்ள வேண்டும்.

தேர்தலில் அவர்கள் வெற்றி பெற்றது எப்படி? யாருடைய சிபார்சைக் கொண்டு வெற்றியடைந்தார்கள்?

மத்திய பார்லிமெண்டரி போர்டின் சிபார்சைக் கொண்டுதான். மகாத்மா, ஆஸாத், படேல் முதலிய மாபெரும் காங்கிரஸ் தலைவர்களின் பெயரைச் சொல்லி, அவர்களுடைய தியாக மகிமையைக் கொண்டுதான்!

தனிப்பட்ட முறையில் அவர்கள் நின்றிருந்தால், அவர்களில் முக்காலே அரைக்கால் வாசிப்பேர் காங்கிரஸை எதிர்த்த அபேட்சகர்களின் கதியைத்தான் அடைந்திருப்பார்கள். அதாவது டெபாஸிட்டைப் பறி கொடுத்திருப்பார்கள்.

தேர்தலில் வெற்றி பெறுவதற்கு மட்டும் மத்திய பார்லிமெண்டரி போர்டின் சிபார்சு வேண்டும், மந்திரி சபை அமைப்புக்கு வேண்டியதில்லை என்று சொல்வது வெறும் அபத்தம்.

காங்கிரஸ் தலைவர்களின் சிபார்சில் ஜனநாயகத்துக்கு விரோதமானது ஒன்றுமில்லை. இம் மாகாணத்தின் மிகப் பெரும்பாலான பொது மக்களின் விருப்பத்தைத்தான் அவர்கள் சிபார்சாகச் சொல்லியிருக்கிறார்கள். அதைக் கடைப்பிடிப்பதுதான் ஜனநாயகம். அதுதான் தேச நன்மைக்கும் உகந்தது.

* * *

அகில இந்தியத் தலைவர்களின் புத்திமதியைப் புறக்கணித்து விட்டு அவர்களுடைய விருப்பத்துக்கு விரோதமாகச் சென்னைக் காங்கிரஸ் பிரதிநிதிகள் நடந்து கொள்வார்களானால், அதன் பலன் என்னவாகும்?

அம்மாதிரி ஏற்படுத்தும் காங்கிரஸ் மந்திரி சபைக்கு நாட்டில் செல்வாக்குச் சிறிதும் இராது.

அத்தகைய மந்திரி சபையிடம் சர்க்கார் அதிகாரிகளுக்கு மதிப்பும் மரியாதையும் இராது. நிர்வாகம் சீர்குலைந்து போகும். லஞ்சம் தலைவிரித்தாடும்.

சென்ற இதழில் வெளியான காலக்ஷேபத் துணுக்குக்குப் பரிசு பெற்றவர்: சா. க. ஐயர், மாம்பாக்கம், வாழைப்பந்தல் போஸ்டு, வட ஆற்காடு ஜில்லா.

நாட்டைப் பயமுறுத்திக் கொண்டிருக்கும் பஞ்ச நிலைமையில் எல்லாவிதமான கேடுகளும் உண்டாகும்.

அத்தகைய மந்திரி சபை மூன்று மாதம் கூட நிலைத்திராது.

வெகு சீக்கிரத்தில் சின்னா பின்னமாகிச் சிதறிப் போய்விடும்.

ஏற்கெனவே, சென்னை மாகாணத்துக்கு 93 ஏ பிரிவை நீட்டி விடும்படியான தேவை ஏற்பட்டு விட்டது. ராஜாஜி எதிர்ப்புக் கிளர்ச்சி காரணமாகவே இந்த அவமானம் சென்னைக்கு நேர்ந்திருக்கிறது.

காங்கிரஸ் மாபெருந் தலைவர்களின் புத்திமதியைப் புறக்கணித்தால் இன்னும் மேலும் மேலும் இந்தத் துரதிர்ஷ்ட மாகாணம் அவமானங்களுக்கு உள்ளாக நேரிடும்.

* * *

அப்படியாவது காங்கிரஸ் தலைவர்களின் ஆலோசனையைப் புறக்கணிப்பதற்கு என்ன காரணம் அல்லது அவசியம் இருக்கிறது?

ஒன்றுமே இல்லை. அதாவது நியாயமான காரணம் ஒன்றுமே இல்லை.

சில தனிப்பட்ட மனிதர்களின் சுயநல மோசடி வேலைகளுக்கு ராஜாஜி தலைமை வகிப்பது ஒரு வேளை இடையூறாயிருக்கலாம்.

அல்லது குறுகிய மாகாணப் பற்றுக் காரணமாகச் சிலர் ஆட்சேபிக்கலாம்.

மற்றப்படி தமிழ் நாட்டுப் பிரதிநிதிகளுக்கு நியாயமான காரணம் ஒன்றுமே இருக்க முடியாது.

காங்கிரஸின் பேரால் போட்டியில்லாமலும் பெருவாரியான வோட்டுகளாலும் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் தமிழ்நாட்டுச் சட்டசபைப் பிரதிநிதிகள் இந்த முக்கியமான சந்தர்ப்பத்தில் தங்களுடைய பொறுப்பை உணர்ந்து கடமையைச் செய்வார்கள் என்று நம்புகிறோம்.

எல்லா நிலைமையையும் நன்கு ஆராய்ந்து தீர்க்காலோசனையின் பேரில் காங்கிரஸ் மாபெரும் தலைவர்கள் அளித்திருக்கும் புத்திமதியை அவர்கள் ஒருநாளும் புறக்கணிக்க மாட்டார்கள் என்று நம்புகிறோம்.

சில சுயநலக்காரர்களின் மோசடி வார்த்தைகளைக் கேட்டு அவர்கள் அத்தகைய பெருந் தவறைச் செய்ய மாட்டார்கள் என்று நம்புகிறோம்.

பொது நன்மையைக் காற்றிலே பறக்கவிட்டு, காங்கிரஸின் அடி வேரை வெட்டி, சென்னை மாகாணத்தின் கௌரவத்துக்குப் பங்கம் விளைவித்து, தங்களைப் பார்த்து உலகமே சிரிக்கும்படியான நிலைமையை அவர்கள் ஒருநாளும் உண்டாக்க மாட்டார்கள் என்று நம்புகிறோம்.

ராஜாஜியைத் தலைவராகத் தேர்ந்தெடுத்துத் தமிழ் நாட்டின் கௌரவத்தையும் நன்மையையும் காப்பாற்றுவார்கள் என்று நம்புகிறோம்.

நமது நம்பிக்கை மெய்யாகிறதா இல்லையா என்பது இந்த இதழ் வெளியாவதற்குள்ளேயே நேயர்களுக்குத் தெரிந்து போய் விடலாம்.

கப்பலோட்டிய தமிழர் நிதி

பம்பாய்த் தமிழ்ச் சங்கத்தின் ஆதரவில் நியமிக்கப்பெற்ற வ. உ. சிதம்பரம் பிள்ளை நிதிக் கமிட்டியார் மேற்படி நிதிக்கு ரூ. 700 வசூலித்து அனுப்பி விருப்பதை மகிழ்ச்சியுடன் பெற்றுக்கொண்டு தூத்துக்குடியிலுள்ள தலைமைக் கமிட்டியின் பொக்கிஷதார் ஸ்ரீ எ. ஸி. பி. வீரபாகு அவர்களுக்கு அனுப்பி விட்டோம். நன்கொடையளித்த பம்பாய் அன்பர்களின் விவரம் வருமாறு:—

ஸ்ரீ ராம்நாத் கோவிந்தராம்	201	0	0
ஸ்ரீ எம். அருணாசலம் பிள்ளை	119	0	0
தாமோதர் கலிதாஸ் & கோ.	101	0	0
ஸ்ரீ நர்பிராம் பிரான்ஷங்கர்	51	0	0
ஸ்ரீ கட்டன் தேவ்சந்த்	51	0	0
ஸ்ரீ கே. வி. ஆர். எம். ராமநாதன் செட்டியார்	51	0	0
ஸ்ரீ ஜயந்திலால் வித்தல்தாஸ்	25	0	0
எம். ஏ. மலிக் அண்டு கோ.	25	0	0
ஏ. வி. ஆர். ஏ. அண்டு கோ.	25	0	0
ஸ்ரீ சாந்திலால்	11	0	0
ஸ்ரீ எம். ஈஸ்வரன்	10	0	0
ஸ்ரீ பி. சுப்ரமணியம்	5	0	0
ஸ்ரீ பி. டி. குமாரசாமி	5	0	0
ஸ்ரீ பி. கிருஷ்ணன்	5	0	0
ஸ்ரீமதி எஸ். ஆர். நாயுடு	5	0	0
ஸ்ரீ து. ராஜரங்கம் (கர்க்கி)	3	0	0
ஸ்ரீ எஸ். ஆராவமுதன்	3	0	0
ஸ்ரீ கே. எம். ராஜகோபாலன்	2	0	0
ஒரு அன்பர்	2	0	0
ஆக ரூ.	700	0	0

இலங்கைக்கு மேற்படி நிதி வசூலுக்காகச் சென்றிருந்த தூத்துக்குடி அன்பர்கள் கொழும்பில் ரூ. 16 ஆயிரம் சொச்சம் வசூலாகியிருக்கும் சந்தோஷச் செய்தியை அறிவித்திருக்கிறார்கள். வசூல் விவரம் வருமாறு:

ஸ்ரீ கே. எம். காளியப்ப பிள்ளை அன் கோ.	1001	0	0
ஸ்ரீ கே. எல். ஏ. ஆர். எஸ். வி. மணி	1001	0	0
ஸ்ரீ எஸ். டி. அன்புடையார்	1001	0	0
தனலக்ஷ்மி அன் கோ.	501	0	0
குகன் இம்போர்ட் & எக்ஸ்போர்ட் கம்பெனி	501	0	0
வி. டி. வி. & கோ, சி. டி. டபுள்யூ. & கோ.	501	0	0
ஸ்ரீ கே. பி. பெரியநாயகம் பிள்ளை	501	0	0
ஸ்ரீ சி. வ. அ. அருணாசலம் பிள்ளை	501	0	0
ஸ்ரீ ஏ. எஸ். பி. சிவன் பிள்ளை	501	0	0
ஸ்ரீ எஸ். வி. ராம நாயுடு & கோ	501	0	0
ஸ்ரீ பி. எஸ். ஏ. எம். முத்து விநாயகம் பிள்ளை	351	0	0
எஸ். கே. எம். பி. & கோ, ஸ்ரீ எம். பகவதி பிள்ளை	351	0	0
ஸ்ரீ எம். ஏ. முத்துசாமி பிள்ளை	351	0	0
ஸ்ரீ எஸ். எஸ். வி. பிரமநாயகம்	351	0	0
ஸ்ரீ ஆர். புன்னைவனம் பிள்ளை	351	0	0
ஸ்ரீ எம். எஸ். வி. நல்லசிவன் பிள்ளை & சன்ஸ்	301	0	0
ஸ்ரீ ஆர். ஆவுடையப் பிள்ளை	301	0	0
ஸ்ரீ ஆர். எம். சீதாராமன் நாயுடு	301	0	0
ஸ்ரீ இ. சுப்பையா பிள்ளை	301	0	0
சூரியம் & கோ.	301	0	0
ஸ்ரீ பி. வி. சுந்தரராமன்	301	0	0
வி. சி. ச. பிரதர்ஸ்	301	0	0
ஆர். எம். எம். சொக்கலிங்கம் பிள்ளை & கோ	301	0	0
எஸ். எஸ். டி. ஆறுமுகம் செட்டியார் & கோ	301	0	0
ஸ்ரீ சு. ப. பிச்சையா பிள்ளை	301	0	0
ஸ்ரீ கே. பழனி வேலாயுதம்	301	0	0
ஸ்ரீ எம். ஜே. சங்கர்	301	0	0
ஸ்ரீ பி. எஸ். எஸ். சேவகன் செட்டியார்	301	0	0
ஸ்ரீ ஏ. அகிஸ்	250	0	0
ஸ்ரீ எஸ் எம். நாயகம்	250	0	0
ஸ்ரீ எஸ். கோமதியா பிள்ளை	151	0	0
சங்கரநாராயண பிள்ளை & கோ	151	0	0
ஸ்ரீ ச. பி. செல்லையா பிள்ளை	151	0	0
ஸ்ரீ ஏ. எஸ். கருப்பசாமி பிள்ளை	151	0	0
ஸ்ரீ. சி. எஸ். ஞானதேசிகன் & கோ	151	0	0
ஸ்ரீ எம். எஸ். எம். வீரபாகு	151	0	0
எஸ். கே. கந்தசாமி செட்டியார் அன் சன்ஸ்	125	0	0
யாழ்ப்பாணம் நண்பர்கள்	121	0	0
காடங்குளம் ஸ்ரீ லக்ஷ்மண பிள்ளை	111	0	0
ஸ்ரீ பி. பி. சண்முகம் பிள்ளை	111	0	0
ஸ்ரீ பி. ஆர். எஸ். பி. சுப்பையா	101	0	0
ஸ்ரீ எஸ். செந்தில்நாயகம்பிள்ளை	101	0	0
ஸ்ரீ கே. ஆழ்வாரப்ப பிள்ளை	101	0	0
ஸ்ரீ ஏ. எஸ். சங்கரன் பிள்ளை	101	0	0
ஸ்ரீ எம். எஸ். ராமசாமி பிள்ளை	101	0	0
ஸ்ரீ கே. ராமசாமி பிள்ளை	101	0	0
ஸ்ரீ ஆர். எம். எஸ். சுப்பையா பிள்ளை	101	0	0
ஸ்ரீ ச. வி. ச. ஆவுடையப்ப பிள்ளை	101	0	0
வி. ஏ. பி. எம். எஸ். சோமசுந்தரம் & கோ.	101	0	0
ஸ்ரீ கே. வி. அய்யாசாமி செட்டியார்	101	0	0
தேவநல்லூர் ஸ்ரீ நா. பெ. குமாரசாமி பிள்ளை	101	0	0
கணேசன் & கோ.	101	0	0
எம். எஸ். பி. எஸ். சுப்பையா முதலியார் அன் கோ.	101	0	0
ராமஜெயம் கம்பெனி	101	0	0
ஸ்ரீ எம். ஸ்ரீரங்கநாத பிள்ளை	101	0	0
ஸ்ரீ ஏ. வி. ஆர். ஏ.	101	0	0
யாழ்ப்பாணம் ஸ்ரீ பி. கு. நா.	100	0	0
சரவணா அன் கோ.	51	0	0
ஸ்ரீ ஒ. ஏ. பி. பரமசிவன் பிள்ளை	51	0	0
ஸ்ரீ எஸ். எஸ். வி. வேலாயுதம்	51	0	0
ஸ்ரீ எம். எஸ். ஆனை	50	0	0
பி. ஏ. எஸ். எஸ். சோமசுந்தரம் கம்பெனி	50	0	0
ஸ்ரீ வி. எஸ். பி. சிவன்	50	0	0
ஸ்ரீ எஸ். சண்முகசுந்தரம் பிள்ளை	25	0	0
ஸ்ரீ எஸ். ஆறுமுகம் பிள்ளை	25	0	0
ஸ்ரீ எம். பக்கீர் மொகைதீன்	25	0	0
அபூபக்கர் குஞ்சுகுட்டி அலி கம்பெனி	25	0	0
ஒரு அனுதாபி	10	0	0
ஸ்ரீ டி. எஸ். பிரான்சிஸ் பர்னாந்து	5	0	0
ஆக	16186	0	0
முன் வரவு	31660	15	11
ஆக மொத்தம்	47846	15	11

சிவகாமியின் சபதம்

கல்கி

அத்தியாயம் 34

வாதாபிப் பெரும் போர்

வெகு காலமாய் இல்லாத வழக்கமாக அஜந்தாவில் கலை விழா நடந்து, அது அரை குறையாக முடிவுற்று ஒரு மாதத்துக்கு மேல் ஆயிற்று.

அந்த ஒரு மாதமும் வடக்கேயிருந்து வாதாபியை நோக்கி விரைந்து வந்த சளுக்க சைன்யத்துக்கும், தெற்கேயிருந்து படையெடுத்து வந்த பல்லவ சைன்யத்துக்கும் ஒரு பெரிய போட்டிப் பந்தயம் நடந்து கொண்டிருந்தது.

வாதாபியை முதலில் யார் அடைவது என்கிற அந்த விரைவுப் பந்தயத்தில் பல்லவ சைன்யமே வெற்றியடைந்தது.

வழியில் யாதொரு எதிர்ப்புமின்றித் தங்கு தடையில்லாமல் பொங்கி வரும் சமுத்திரத்தைப் போல் முன்னேறி வந்த அந்தப் பல்லவ சேனாசமுத்திரம், சளுக்க சைன்யம் இன்னும் ஆறு காத தூரத்தில் இருக்கும்போதே வாதாபியை அடைந்து அந்த மாபெரும் நகரின் கோட்டை மதிலை நாலாபுறமும் சூழ்ந்து கொண்டது.

திடீரென்று முன்னெச்சரிக்கையில்லாமல் நேர்ந்த அந்தப் பெரும் விபத்தினால் வாதாபி மக்கள் கதி கலங்கிப் போனார்கள்.

புலிகேசி சக்கரவர்த்தியின் வீர செளரிய பராக்கிரமங்களையும் அவருடைய புகழானது கடல்களுக்கப்பாலுள்ள தூர தூர தேசங்களிலெல்லாம் பரவியிருப்பதையும் எண்ணிப் பெருமிதத்துடனிருந்த வாதாபியின் மக்கள் தங்கள் நாட்டின் மீது இன்னொரு நாட்டு அரசன் படையெடுத்து வரக் கூடும் என்று கனவிலும் கருதவில்லை.

சற்றும் எதிர்பாராத சமயத்தில் களங்கமற்ற வானத்திலிருந்து விழுந்த பேரிடிபோல் வந்த பல்லவப் படையெடுப்பானது அவர்களுக்குப் பிரமிப்பையும் திகைப்பையும் உண்டாக்கியது.

நகரில் அச்சமயம் சக்கரவர்த்தி இல்லை என்பதும் கோட்டைப் பாதுகாப்புக்குப் போதுமான சைன்யமும் இல்லையென்பதும் ஜனங்கள் எல்லாருக்கும் தெரிந்திருந்தது. இதனால் நகரமாந்தரில் பெரும்பாலோர் என்றும் அறியாத பீதிக்கு உள்ளாயினர்.

பௌத்த மதத்தினிடமும் பௌத்தர்களிடமும் விரோத பாவம் கொண்டிருந்த சமணர்கள், சைவர்கள், சாக்தர்கள் ஆகியோர், "அஜந்தா கலை விழா உண்மையில் பௌத்தர்களின் சதியாலோசனைச் சூழ்ச்சி" என்று பேசிக் கொண்டார்கள்.

பொது மக்களின் கோபத்திலிருந்து பௌத்த விஹாரங்கள், பௌத்த மடங்கள் ஆகியவற்றைக் காப்பாற்றும் பொருட்டு வாதாபி கோட்டைத் தலைவன் பீமசேனன் மேற்படி விஹாரங்களுக்கும் மடங்களுக்கும் விசேஷக் காவல் போடவேண்டியதாயிற்று.

அதோடு, ஜனங்களின் பீதியைப் போக்கித் தைரியம் ஊட்டுவதற்காகச் சக்கரவர்த்தியிடமிருந்து அவசரத் தூதர்கள் மூலமாக வந்த திருமுக ஓலையை வாதாபி நகரின் நாற்சந்திகளில் எல்லாம் தளபதி பீமன் வாசிக்கப் பண்ணியிருந்தான்.

சக்கரவர்த்தி. அந்தத் திருமுகத்தில் நர்மதைக் கரையிலுள்ள மாபெரும் சளுக்க சைன்யத்துடன் தாம் வாதாபியை நோக்கி விரைந்து வந்து கொண்டிருப்பதாகவும், வேங்கிநாட்டிலிருந்து இன்னொரு பெரும் சைன்யம் வந்து கொண்டிருப்பதாகவும், ஒரு வேளை தாம் வருவதற்குள்ளே பல்லவ சைன்யம் வாதாபியை அடைந்து முற்றுகையிட்டு விட்டால் அதற்காக நகர மக்கள் மனம் கலங்க வேண்டாம் என்றும், பல்லவ சைன்யத்தை நிர்மூலம் செய்து வாதாபியைக் கூடிய சீக்கிரம் முற்றுகையிலிருந்து விடுதலை செய்வதாகவும் உறுதி கூறியிருந்தார்.

மேற்படி திருமுகத்தை நாற் சந்திகளில் படிக்கக் கேட்ட பிறகு வாதாபி மக்கள் ஒருவாறு பீதி குறைந்து தைரியம் பெற்றார்கள்.

* * *

நர்மதை நதிக்கரையிலிருந்த சளுக்கப் பெரும் படையுடன் புலிகேசி சக்கரவர்த்தி வாதாபிக்கு நாலு காத தூரத்தில் வந்து சேர்ந்தபோது, தமக்கு முன்னால் பல்லவ சைன்யம் வாதாபியை அடைந்து கோட்டையைச் சூழ்ந்து கொண்டது என்ற விவரம் அறிந்தார். உடனே பிரயாணத்தை நிறுத்திக் கொண்டார். வேங்கி சைன்யம் வழியிலே பல காடு மலை நதிகளைக் கடந்து வர வேண்டியிருந்தபடியால் அது வந்து சேர இன்னும் சில காலம் ஆகும் என்றும் தெரிய வந்தது. இந்த நிலைமையில் புலிகேசி சக்கரவர்த்தி தமது மந்திரிகளையும் படைத் தலைவர்களையும் கலந்தாலோசித்து, உடனே போர் தொடங்காமல் சில நாள் காத்திருந்து முடிவு செய்தார். வேங்கி சைன்யமும் வந்து சேர்ந்த பிறகு பல்லவ சைன்யத்தை ஒரு பெரும் தாக்காகத் தாக்கி நிர்மூலம் செய்து விடுவது என்றும் அதுவரையில் அப்போது வந்து சேர்ந்திருந்த இடத்திலேயே தங்குவது என்றும் தீர்மானித்திருந்தார்.

ஆனால் அவருடைய தீர்மானங்களை நிறைவேற்றுவதற்குப் போர்க் கலையில் மகா நிபுணர்களான மாமல்ல சக்கரவர்த்தியும் சேனாபதி பரஞ்சோதியும் இடங் கொடுக்கவில்லை.

முதலிலே வாதாபிக் கோட்டையைத் தாக்குவதா அல்லது புலிகேசியின் தலைமையில் உள்ள சளுக்கப் பெரும் படையைத் தாக்குவதா என்ற விஷயம் பல்லவ சேனைத் தலைவர்களின் மந்திராலோசனைச் சபையில் விவாதிக்கப்பட்டது.

வந்த காரியம் வாதாபியைக் கைப்பற்றுவதே யாதலால், உடனே கோட்டையைத் தாக்க வேண்டுமென்று மானவன்மரும் அச்சுதவர்மரும் அபிப்பிராயப்பட்டார்கள்.

புலிகேசியின் சைன்யத்தோடு வேங்கி சைன்யம் சேர்ந்து விட இடங் கொடுக்கக் கூடாதென்றும், வேங்கி சைன்யம் வருவதற்குள்ளே புலிகேசியைத் தாக்கி ஒழித்துவிட வேண்டும் என்றும், வாதாபிக் கோட்டை எங்கேயும் ஓடிப் போய் விடாதென்றும், அதன் முற்றுகை நீடிக்க நீடிக்க, பிற்பாடு அதைத் தாக்கிப் பிடிப்பது சுலபமாகி விடுமென்றும் சேனாபதி பரஞ்சோதி கூறினார்.

ஒற்றர் தலைவன் சத்ருக்னன் சேனாபதியை ஆதரித்தான்.

மாமல்லரும் அந்த யோசனையையே முடிவாக ஒப்புக் கொண்டார்.

எனவே, வாதாபிக் கோட்டையின் முற்றுகைக்கு ஒரு சிறு படையை மட்டும் நிறுத்திவிட்டு, பல்லவ சைன்யத்தின் மற்றப் பெரும்பகுதி வடக்கு நோக்கிக் கிளம்பிற்று.

இதையறிந்த புலிகேசி சக்கரவர்த்தி இனித் தாம் பின்வாங்கிச் சென்றால் சளுக்க சாம்ராஜ்யத்தின் மதிப்பு சின்னா பின்னமாகி விடும் என்பதை உணர்ந்து போருக்கு ஆயத்தமானார்.

வாதாபிக்கு வடக்கே மூன்று காத தூரத்தில் இரு பெரும் சைன்யங்களும் கை கலந்தன.

அந்தக் காட்சியானது, கீழ் சமுத்திரமும் மேல் சமுத்திரமும் தங்கு தடையின்றிப் பொங்கி வந்து ஒன்றோடொன்று மோதிக் கலந்ததைப் போலிருந்தது.

மூன்று பகலும் மூன்று இரவும் அகோரமான யுத்தம் நடந்தது.

ஆயிரம் பதினாயிரம் வீரர்கள் வாளால் வெட்டுண்டும் வேலால் குத்துண்டும் மாண்டு விழுந்தார்கள்.

வீர சொர்க்கம் அடைந்தவர்களின் சவங்கள்,—கால்வேறு கைவேறு தலை வேருன உயிரற்ற உடல்கள்,—போர்க் களத்தில் மலை மலையாகக் குவிந்தன.

இறந்த யானைகளின் உடல்கள் ஆங்காங்கு கருங் குன்றுகளைப் போல் காட்சி தந்தன.

மனிதர் உடல்களின் மீது குதிரை களின் உடல்களும், குதிரைகளின் சவங்கள்மீது மனிதர்களின் பிரேதங் களுமாகக் கலந்து கிடந்தன.

மரணவஸ்தையி லிருந்த மனிதர் களின் பரிதாப ஓலமும் யானைகளின் பயங்கரப் பிளிறலும் குதிரைகளின் சோகக் கனைப்பும் கேட்கச் சகிக்காத கோரப் பெரும் சத்தமாக எழுந்தது.

போர்க்களத்தி லிருந்து இரத்த ஆறுகள் நாலா பக்கமும் பெருக் கெடுத்துப் பாய்ந்து ஓடின.

அந்த உதிர நதிகளில் போர் வீரர் களின் வெட்டுண்ட கால் கைகள் மிதந்து சென்றது பார்க்கச் சகிக்காத கோரக் காட்சியா யிருந்தது.

லட்சக் கணக்கான வீரர்களும் ஆயிரம் பதிஞயிரக் கணக்கான யானை களும் குதிரைகளும் ஈடுபட்டிருந்த அந்த மாபெரும் யுத்தத்தை நடந்தது நடந்தபடி வர்ணிப்பது நம்மால் இயலாத காரியம்.

வால்மீகியையும் வியாசரையும் ஹோமரையும் கம்பரையும் போன்ற மகா நாடக ஆசிரியர்களுக்குத்தான் அதன் வர்ணனை சாத்தியமாகும்.

* * *

போரின் ஆரம்பத்திலிருந்தே ஒரு வாறு கட்சிகளின் பலா பலங்கள் தெரிந்து விட்டன. போர்க்கலையின் நுட்பங்களை அறிந்தவர்கள், போரின் முடிவு என்ன ஆகும் என்பது ஊகித் துணர்வதும் சாத்தியமா யிருந்தது.

வாதாபிக் கருகில் தங்கிச் சிரம பரிகாரம் செய்துகொண்டு பூரண பலத்துடனும் அளவில்லா உற்சாகத் துடனும் போரில் ஈடுபட்ட பல்லவ சைன்யத்தின் பெரும் தாக்குதலுக்கு முன்னால், நெடுந்தூர இடைவிடாப் பிரயாணத்தினால் களைப்புற்றிருந்த சளுக்க சைன்யம் போர்க்களத்தில் நிற்பதற்கே திணறவேண்டியதா யிருந்தது.

சளுக்க ஸைன்யத்தின் பிரதான யானைப்படை வேங்கியில் இருந்தபடி யால் அது வந்து சேராதது சளுக்க சைன்யத்தின் பலக் குறைவுக்கு முக் கிய காரணமா யிருந்தது.

மூன்றும் நாள் காலையில் பல்லவ சைன்யத்தின் வெற்றியும் சளுக்க சைன்யத்தின் தோல்வியும் சர்வ நிச்சய மாகத் தெரிந்து விட்டது.

அன்று மத்தியானம் சளுக்க தளபதி களும் மந்திரிகளும் புலிகேசி சக்கர வர்த்தியைச் சூழ்ந்துகொண்டு, சாம் ராஜ்யத்தின் நன்மைக்காக அவர் பின் வாங்கிச் செல்வது அவசியம் என்றும், பின்வாங்கிச் சென்று எங்கேயாவது ஒரு பத்திரமான இடத்தில் வேங்கி சைன்யம் வந்து சேரும் வரையில் காத்திருக்க வேண்டும் என்றும் சொன்னர்கள்.

அதைத் தவிர வேறு வழியில்லை யென்பதைக் கண்டு சக்கரவர்த்தியும் அதற்குச் சம்மதித்தார். அதுவரையில் சேதம் அதிகமாகா திருந்த குதிரைப் படையின் பாதுகாப்புடன் அன்றைய தினம் அஸ்தமித்ததும் சக்கரவர்த்தி பின்வாங்கிச் செல்ல வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது.

ஆனல் மேற்படி முடிவைக் காரியத் தில் நிறைவேற்ற அன்று சாயங்காலம் ஒரு பெரும் இடையூறு ஏற்பட்டது. மானவன்மரால் விசேஷப் போர்ப் பயிற்சி அளிக்கப்பட்டிருந்த பல்லவக் களிற்றுப் படையைக் கடைசியாக உபயோகிப்ப தென்று வைத்திருந்து, அன்று சாயங்காலம் ஏவிவிட்டார்கள்.

ஐயாயிரம் மத்தகஜங்கள் துதிக்கை களிலே இரும்பு உலக்கையைப் பிடித் துச் சுழற்றிக் கொண்டு சளுக்கர் குதிரைப் படைமேல் பாய்ந்தபோது, பாவம், அந்தக் குதிரைகள் அளவில் லாத பீதியடைந்து நாலாபுறமும் சிதறி ஓடின. அந்தக் குதிரைகளை விட வேகமாகப் போரில் சாகாமல் எஞ்சியிருந்த சளுக்க வீரர்கள் ஓடினர்கள்.

அவ்விதம் புறங்காட்டி ஓடிய சளுக்க வீரர்களைப் பல்லவ வீரர்கள் துரத்திக் கொண்டு ஓடினர்கள்.

அந்த மூன்றும் நாள் இரவு முழுதும் ஓடுகிற சளுக்க வீரர்களைப் பல்லவ வீரர்கள் துரத்திச் சென்று வேட்டையாடுதல் நடைபெற்றுக் கொண்டிருந்தது.

மறுநாள் சூரியோதய மானபோது, மூன்று தினங்கள் கடும்போர் நடந்த பயங்கர யுத்த களத்தில் இறந்து போன சளுக்கரின் உடல்களைத் தவிர உயிருள்ள சளுக்கர் ஒருவராவது காணப்படவில்லை.

வெற்றி முரசுகள் முழங்க, சங்கங்கள் ஆர்ப்பரித்து ஒலிக்க, ஜய கோஷங்கள் வானளாவ, ஒரே கோலாகலத்துக்கு மத்தியில் பல்லவ சக்கரவர்த்தியும் அவருடைய தளபதிகளும் ஒருவருக்கொருவர் வாகைமாலை சூடியும் வாழ்த்துக் கூறியும் பல்லவ சேனை அடைந்த மாபெரும் வெற்றியைக் கொண்டாடினர். எனினும், அவ்வளவு கோலாகலமான கொண்டாட்டங்களுக்கு மத்தியில் அவர்களுடைய



உள்ளத்தில் ஒரு சிறு கவலை குடிகொண்டிருந்தது. அது, சளுக்க சக்கரவர்த்தி புலிகேசியின் கதி என்னவாயிற்று என்ற கவலைதான். வாதாபி சக்கரவர்த்தி போர்க்களத்தில் இறுதிவரை நின்று போராடி உயிரிழந்து வீழ்ந்து வீர சொர்க்கம் அடைந்தாரா, அல்லது சளுக்க வீரர் பலர் புறங்காட்டி ஓடிப் போனதைப்போல் அவரும் ஓடிவிட்டாரா என்பது தெரியவில்லை. போர்க்களத்தில் அவர் விழுந்திருந்தால் மாபெரும் சக்கரவர்த்திக்குரிய மரியாதைகளை அவருடைய உடலுக்குச் செய்து கௌரவிக்க வேண்டும். ஒரு வேளை அவர் ஓடிப்போயிருந்தால், மறுபடியும் படை திரட்டிக் கொண்டு போருக்கு வரக் கூடுமல்லவா?

இப்படி நடந்திருக்குமா, அப்படி நடந்திருக்குமா என்று வெகு நேரம் விவாதித்த பிறகு, அதைப் பற்றி இப்போது விவாதிப்பதில் பயனில்லையென்ற முடிவு ஏற்பட்டது. சத்ருக்னனுடைய தலைமையில் போர்க்கள மெல்லாம் நன்றாகத் தேடிப் பார்த்துப் புலிகேசியின் உடல் கிடைத்தால் எடுத்து வருவதற்கு ஏற்பாடு செய்துவிட்டு மாமல்லரும் மற்றவர்களும் வாதாபியை நோக்கித் திரும்பினார்கள்.

அத்தியாயம் 35

பிக்ஷுவின் சபதம்

வாதாபிக் கோட்டைக்கு வெளியே சற்றுத் தூரத்தில் காபாலிக மதத்தாரின் பலி பீடம் இருந்தது என்பதை நேயர்கள் அறிவார்கள்.

வாதாபிப் பெரும் போர் முடிவுற்றதற்கு மறுநாள் இரவு அந்தக் காபாலிகர் பலி பீடத்துக்குச் சமீபத்தில் ஒரு பயங்கர சோகநாடகம் நடைபெற்றது.

கிழக்கே அப்போதுதான் உதயமாகிக் கொண்டிருந்த சந்திரனின் கிரணங்கள் மரங்களின் வழியாகப் புகுந்து வந்து மொட்டை மொட்டையாக நின்ற பாறைகளின்மீது விழுந்தபோது, அந்தக் கருத்த பாறைகளும் அவற்றின் கருத்த நிழல்களும் கரிய பெரிய பேய்களின் உருவங்களைக் கொண்டு அந்தப் பாறைப் பிரதேசத்தைப் பார்ப்பதற்கே பீதிகரமாகச் செய்து கொண்டிருந்தன.

பாறைகளின் ஓரமாகச் சில சமயம் நிழல்களில் மறைந்தும் சில சமயம் நிலா ஒளியில் வெளிப்பட்டும் ஒரு கோரமான பெண் உருவம் வந்து கொண்டிருந்தது. அந்த உருவம் தன் தோளின்மீது இன்னொரு உடலைச் சுமந்து கொண்டு நடந்தது.

அந்த உடல் விறைப்பாகக் கிடந்த விதத்திலிருந்து அது உயிரற்றது என்பதை எளிதில் ஊகிக்கலாம்.

அவ்விதம் தோளிலே பிரேதத்தைச் சுமந்துகொண்டு நடந்த பெண் உருவமானது நிலா வெளிச்சத்தில் தோன்றிய போது, அதன் நிழல் பிரம்மாண்ட ராட்சஸ வடிவங்கொண்டு, ஒரு பெரும் பூதம் தான் உண்பதற்கு இரை தேடி எடுத்துக் கொண்டு வருவது போலத் தோன்றியது.

சற்று அருகில் நெருங்கிப் பார்த்தோமானால், அந்தப்பெண் உருவம் கற்பனையில் உருவகப்படுத்திக் கொள்ளும் பேயையும், பூதத்தையும் காட்டிலும் அதிக பயங்கரத் தோற்றம் அளித்தது என்பதை அறியலாம்.

கருத்துத் தடித்த தோலும், குட்டையான செம்பட்டை மயிரும், அனலைக் கக்கும் கண்களுமாக அந்தப் பெண் உருவம் காவியங்களில் வர்ணிக்கப்படும் கோர ராட்சஸிகளைப் பெரிதும் ஒத்திருந்தது.

ஆனால் அந்தப் பெண் பேய் தன் தோளில் போட்டுக் கொண்டு சுமந்து வந்த ஆண் உருவம் அத்தகைய கோரமான உருவமல்ல. இராஜகளை பொருந்திய கம்பீர முகத் தோற்றம் கொண்டது.

அது யார்? ஒருகால்......?

* * *

மேற் கூறிய கோர ராட்சஸி ஒரு பாறையின் முனையைத் திரும்பிய போது, எதிரில் யாரோ வருவது கண்டு திடுக்கிட்டுத் தயங்கி நின்றாள்.

அவள் திடுக்கிட்டதற்குக் காரணம் என்ன? பயமா? அவளுக்குக்கூடப் பயம் உண்டா? அல்லது வேறு ஏதேனும் காரணமா?

எதிரே வந்த உருவம் சிறிதும் தயங்காமல் மேலும் வந்துகொண்டிருந்தது. அருகில் நெருங்கி வந்ததும், "ரஞ்சனி! நீதானா?" என்று புத்த பிக்ஷுவின் குரல் கேட்டது.

அந்தக் கோர ராட்சஸியின் பெயர் "ரஞ்சனி" என்று அறிந்து நமக்கு வியப்பு உண்டாகிறதல்லவா? ஆயினும், அந்தப் பெண் ஒரு காலத்தில் "ரஞ்சனி" என்னும் அழகிய பெயருக்கு உரியவளாய், பார்த்தவர் கண்களை ரஞ்சிக்கச் செய்பவளாய், அவர்கள் உள்ளத்தை மோகிக்கச் செய்பவளாய்த்தான் இருந்தாள். அவளை இம்மாதிரி கோர வடிவங்கொண்ட காபாலிகையாகச் செய்தவர் புத்த பிக்ஷுதான் என்பதை முன்னமே அவருடைய வாய்மொழியினால் தெரிந்து கொண்டிருக்கிறோம்.

பிக்ஷுவின் குரலைக் கேட்டதும், காபாலிகையின் திகைப்பு இன்னும் அதிகமானதாகத் தோன்றியது. கற்சிலைபோல் ஸ்தம்பித்து நின்றவளைப் பார்த்து, புத்த பிக்ஷு மறுபடியும், "ரஞ்சனி! இது என்ன மௌனம்? எங்கே போய் வேட்டையாடிக் கொண்டு வருகிறாய்?" என்று கேட்டார்.

காபாலிகையின் திகைப்பு ஒருவாறு நீங்கியதாகத் தோன்றியது.

"அடிகளே! நிஜமாக நீங்கள்தானா?" என்று கேட்டாள். அவளுடைய கடினமான குரலில் வியப்பும் சந்தேகமும் தொனித்தன.

"இது என்ன கேள்வி? நான்தான் என்பதில் உனக்கு என்ன சந்தேகம் வந்தது? என்னைத் தவிர இந்த நள்ளிரவில் உன்னை யார் தேடி வருவார்கள்? உன் குகையில் உன்னைத் தேடிக் காணாமல் எங்கே போயிருக்கிறாய் என்று பார்க்கக் கிளம்பினேன்! அது என்ன? யார் உன் தோளில்? எந்தப் பாவியின் பிரேதத்தைச் சுமந்து வருகிறாய்? இப்போதெல்லாம் உனக்கு நல்ல வேட்டை போலிருக்கிறது!"

இவ்விதம் பிக்ஷு சொல்லிக் கொண்டு வந்தபோது, காபாலிகை தான் இத்தனை நேரமும் தோளில் சுமந்து கொண்டிருந்த உடலைத் தொப் பென்று கீழே போட்டாள்.

"நல்ல வேடிக்கை!" என்று சொல்லி விட்டுக் கோரமாகச் சிரித்தாள்.

"என்ன வேடிக்கை? அந்தச் சவத்தை எங்கே கண்டு எடுத்தாய்?" என்று பிக்ஷு கேட்டார்.

"அடிகளே! தங்களை நினைத்து இரண்டு காத தூரம் கண்ணீர் விட்டு அழுது கொண்டே நடந்து வந்தேன். அவ்வளவும் வீணாய்ப் போயிற்று!" என்றாள் காபாலிகை.

"கண்ணீர் விட்டாயா? என்னை நினைத்து ஏன் கண்ணீர் விட வேண்டும்? இது என்ன வேடிக்கை?" என்றார் பிக்ஷு.

"பெரிய வேடிக்கைதான். அந்த வேடிக்கையை அடியிலிருந்து சொல்கிறேன், கேளுங்கள்!" என்று காபாலிகை ஆரம்பித்தாள்.

"யுத்த வேடிக்கை பார்ப்பதற்காகச் சென்றிருந்தேன். போர்க்களத்துக்குக் கொஞ்ச தூரத்திலிருந்த ஒரு குன்றின் உச்சியிலிருந்து பார்த்துக் கொண்டிருந்தேன். அப்பப்பா! என்ன யுத்தம்! என்ன சாவு! எத்தனை நரபலி! காபாலிகர் இங்கே மாதம் ஒரு தடவை வந்து ஒரு நரபலி கொடுக்கிறார்களே! இது என்ன பிரமாதம்? அங்கே லட்சோப லட்சம் மனிதர்களையும் ஆயிரம் பதினாயிரம் யானைகளையும் குதிரைகளையும் பலி கொடுத்தார்கள். மூன்று நாள் இரவும் பகலும் பலி நடந்தது. கடைசியில் ஒரு கட்சியார் ஓடவும் இன்னொரு கட்சியார் துரத்தவும் ஆரம்பித்தார்கள். யாரை யார் துரத்துகிறார்கள் என்று கூட நான் கவனிக்கவில்லை. எங்கே என்னைப் பிடித்துக் கொள்வார்களோ என்று பயந்து ஓட்டம் பிடித்தேன். இன்று பகலெல்லாம் காட்டில் ஒளிந்து ஒளிந்து வந்தேன். சாயங்காலம் ஆனபோது பின்னால் ஒரு குதிரை ஓடி வரும் சத்தம் கேட்டது. என்னைப் பிடிக்கத்தான் யாரோ வருகிறார்கள் என்று மேலும் வேகமாய் ஓடினேன். கொஞ்ச நேரம்

குதிரையும் தொடர்ந்து ஓடிவந்தது. நன்றாக இருட்டியதும் யார்தான் என்னைப் பிடிக்க வருகிறார்கள் என்று பார்ப்பதற்காக ஒரு மரத்தின் பின்னால் மறைந்து நின்றேன். என்னைத் துரத்தி வந்த குதிரை திடீரென்று கீழே விழுந்தது. அதன் மேலிருந்த மனிதனும் அப்படியே கிடந்தான். எழுந்திருக்கவில்லை. அருகிலே சென்று பார்த்தபோது, குதிரை மரணாவஸ்தையில் இருந்தது. அதன் மேலிருந்த மனிதன் கிடந்த மாதிரியிலிருந்து அவன் இறந்து போய் வெகு நேரமாகியிருக்கவேண்டும் என்று தோன்றியது. அவன் கால்கள் குதிரையின் கடிவாளத்தில் மாட்டிக்கொண்டிருந்தபடியால் கீழே விழாமல் தொங்கிக் கொண்டே வந்திருக்க வேண்டும் என்று தெரிந்தது. குனிந்து அவன் முகத்தைப் பார்த்தேன். தங்களுடைய முகம் மாதிரி இருந்தது. நான் பைத்தியக்காரிதானே? தாங்கள் தான் என்று நினைத்துத் தோளில் போட்டுக் கொண்டு அழுது கொண்டே வந்தேன்!......”

அப்போது புத்த பிக்ஷுவுக்குத் திடீரென்று ஏதோ ஒரு எண்ணம் தோன்றியிருக்க வேண்டும். சட்டென்று கீழே குனிந்து தரையில் கிடந்த உடலின் முகத்தை நிலா வெளிச்சத்தில் உற்றுப் பார்த்தார்.

“தம்பி! புலிகேசி!” என்று பிக்ஷு வீறிட்டு அலறியது அந்த விசாலமான பாறைப் பிரதேசம் முழுவதிலும் எதிரொலி செய்தது.

“ரஞ்சனி! நீ போய்விடு! சற்று நேரம் என்னைத் தனியே விட்டு விட்டுப் போ! இங்கு நில்லாதே!” என்று பிக்ஷு விம்மலுடன் சொன்னதைக் கேட்டுக் காபாலிகை பயந்து போய் அங்கிருந்து விலகிச் சென்று பாறையின் மறைவில் நின்றாள்.

பிக்ஷு கீழே உட்கார்ந்து புலிகேசியின் உடலைத் தமது மடியின் மீது போட்டுக் கொண்டார்.

“தம்பி! உனக்கு இந்தக் கதியா? இப்படியா நீ மரணமடைந்தாய்? இந்தப் பாவியினால் அல்லவா நீ இந்தக் கதிக்கு உள்ளாக நேர்ந்தது?” என்று சொல்லி விட்டுப் பிக்ஷு தமது மார்பிலும் தலையிலும் மாற்றி மாற்றி அடித்துக் கொண்டார்.

“ஐயோ, தம்பி! உனக்கு நான் துரோகம் செய்து விட்டதாக எண்ணிக் கொண்டே யல்லவா நீ இறந்து போனாய்? என் உயிர்க்கு உயிரான சகோதரனுக்கு, — தாயின் கர்ப்பத்திலே என்னோடு பத்து மாதம் கூட இருந்து பிறந்தவனுக்கு, — நான் துரோகம் செய்வேனா? மாமல்லனைப் பயங்கரமாகப் பழி வாங்குவதற்காக வல்லவா நான் சூழ்ச்சி செய்தேன்? அதை உன்னிடம் சொல்வதற்கு முடியாமல் இப்படி நடந்துவிட்டதே!...”

மறுபடியும் பிக்ஷு தமது மார்பில் ஓங்கி அடித்துக் கொண்டு சொன்னார்:—“பாழும் பிக்ஷுவே! உன் கோபத்தில் இடி விழ! உன் காதல் நாசமாய்ப் போக! உன் சிவகாமி......! ஆ! சிவகாமி என்ன செய்வாள்?... தம்பி! உனக்கு நான் துரோகம் செய்யவில்லை. தேசத்துக்கும் நான் துரோகம் செய்துவிட வில்லை. அன்றைக்கு அஜந்தாவில் நீயும் நானும் கொஞ்சம் பொறுமையாக மட்டும் இருந்திருந்தோமானால் இம்மாதிரி விபரீதம் நேர்ந்திராதே! இந்த யுத்தம் நடக்கவே நான் விட்டிருக்க மாட்டேனே! பல்லவ நாட்டார் அத்தனை பேரையும் பட்டினியால் சாகப் பண்ணியிருப்பேனே! மாமல்லனையும் உயிரோடு பலி கொடுத்திருப்பேனே! ஐயோ! இப்படியாகி விட்டதே!......”

பிக்ஷு புலிகேசியின் உடலை மடியிலிருந்து மெதுவாக எடுத்துக் கீழே வைத்தார். எழுந்து நின்று இரு கைகளையும் வானத்தை நோக்கித் தூக்கிக் கொண்டு, பாறை மறைவிலிருந்த காபாலிகைக்குக்கூட ரோமம் சிலிர்க்கும்படியான அலறும் குரலில் உரக்கக் கூவினார்:—“தம்பி! புலிகேசி! உன் மரணத்துக்குப் பழி வாங்குவேன்! பலி வாங்குவேன்! புத்த பகவானின் பத்ம பாதங்களின் பேரில் சத்தியம் செய்கிறேன். கபால மேந்தும் சம்ஹார ருத்ரன் தலைமீது ஆணையிட்டுச் சொல்கிறேன். இரத்த பலி கேட்கும் சக்தி பத்ரகாளியின் பேரில் சத்தியம் வைத்துச் சபதம் செய்கிறேன். பழி வாங்குவேன்! உன்னைக் கொன்றவர்களைப் பழி வாங்குவேன்!”

குற்றவாளி யார்?

எஸ். கிருஷ்ணமூர்த்தி



பெரியசாமிப் பிள்ளை எழுந்து தனக்குத் தமிழ் அவ்வளவு நன்றாகப் பேச வராது என்று கூறி விட்டுப் பேசினார்:—

"இப்பொழுது நாம் கூடி யிருப்பது இவ் வருஷத்திய அலகுக் காவடி உற்சவத்தை வழக்கம்போல் நடத்துவதா, அல்லது வெறும் சாதாரணமாக நடத்துவதா என்பதை முடிவு செய்வதற்குத் தான். அரசாங்கத்தாரின் விருப்பத்துக்கு விரோதமாக நாம் ஏதாவது செய்தால் மிகவும் கஷ்டப்பட வேண்டி வரும். அதனால் பல வித்தியாசமான விபரீதங்கள் நேரலாம். அதைச் சமாளிக்க நம்மால் முடியுமா? அதை யோசிக்கும் போது முடியாது என்றே தோன்றுகிறது. ஆகையால் இவ் வருஷம் சாதாரணக் காவடி மட்டும் எடுத்தால் போதும் என்றுதான் நான் சொல்வேன். மீறி ஏதாவது நீங்கள் செய்வதாக இருந்தால் நான் இந்தக் கூட்டத்தினின்று விலகித்தானிருப்பேன்."

"சுத்தப் பயந்தாங் கொள்ளி!" என்று மாரிமுத்து உறுமினான்.

"வேறு யாராவது பேசப் போகிறீர்களா?" என்று தலைவர் கேட்கவே, மாரிமுத்து எழுந்தான். மாரிமுத்துவைப் பற்றிய பொதுவான அபிப்பிராயம், "நல்லாப் பேசுவான்!" என்பதுதான்.

அவனும் தனக்கே உரிய தமிழ் பாணியில், "இந்த வருஷம் அலகுக் காவடி எடுத்துத்தான் ஆகவேண்டும்; யாராவது அதை எதிர்த்தால் நூறு ஆட்கள் தடியுடன் சண்டைக்குத் தயாராய் இருக்கின்றார்கள்; வழக்கமான பழக்கங்களை 'அவர்கள் சொல்கிறார்கள், இவர்கள் தடுப்பார்கள்' என்று பயந்து விட்டுவிடுவது அவமானகரமான விஷயமாகும்' என்று காரசாரமாகப் பேசிவிட்டு கரகோஷத்தினிடையே உட்கார்ந்தான்.

பெரும்பாலும் இளம் வயதினர் நிறைந்த கூட்டமாக அது இருந்தால்

பெரியசாமியின் கட்சி அங்கு எடுபடவில்லை. கூட்டம் அலகுக் காவடி எடுப்பது என்றே முடிவாகத் தீர்மானித்தது.

பெரியசாமிப் பிள்ளை இந்த முடிவு தெரியு முன்னமே கூட்டத்தை விட்டு வெளியேறி விட்டார்.

இதனால் ஊரில் இரண்டு கட்சிகள் பிறந்து விட்டன. நாட்கள் வளர வளர இரு கட்சிக்கும் துவேஷமும் வளர்ந்து கொண்டே வந்தது. கடைசியில் இரு கட்சிக்காரர்களும் ஒருவருக்கொருவர் பரம விரோதிகளானார்கள்.

பெரியசாமிப் பிள்ளைக்கு வயது நாற்பத்தைந்து இருக்கும். அவருக்கு இரண்டு புதல்வர்களுண்டு. மூத்தவன் வெளியூரில் ஏதோ சர்க்கார் உத்தியோகத்தில் இருந்தான். பெரியசாமிப் பிள்ளை அலகுக் காவடி எடுப்பதை எதிர்த்ததற்கு முக்கிய காரணம் இதுதான் என்று பரஞ்சோதிப் பண்டாரம் சொல்லிக் கொண்டிருந்ததாகப் பெரியசாமியின் கட்சி ஆட்கள் உறுமிக் கொண்டிருந்தார்கள். நியாயமும் அதுதானே? மேலும் பெரியசாமிப் பிள்ளை சாந்தம், மரியாதை முதலிய குணங்களை இயற்கையாகவே உடைத்தாயிருந்தார். ஆனால் வந்த சண்டையை விடமாட்டார் என்று மட்டும் அந்த ஊர் ஜனங்களுக்குத் தெரியும்.

பெரியசாமிப் பிள்ளையின் இரண்டாவது பையன் சோமுவிற்கு வயது எட்டுதான் இருக்கும். அவனுடைய குண விசேஷங்களை வர்ணிக்க வேண்டுமானால் "மகா வாலு!" என்று ஒரே வார்த்தையில் கூறிவிடலாம்.

2

மறு நாளைக்கு மறுநாள் அலகுக் காவடி எடுக்க வேண்டிய தினம். கோயில் நிர்வாகிகளுக்குத் தஞ்சாவூர் போலீஸ் அதிகாரிகளிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. அதில் அந்த வருஷம் அலகுக் காவடி எடுக்கப் போவதாகத் தங்களுக்குத் தெரிவதாகவும், அது அரசாங்கத்தாரின் தடை உத்தரவை மீறுவதாகுமென்றும், அப்படி ஏதாவது நடந்தால் அரசாங்கத்தார் எவ்விதமான அடக்குமுறையையும் கைக்கொள்வார்கள் என்றும் கண்டிருந்தது.

மாரிமுத்துவின் காதில் இவ்விஷயம் எட்டியதும் அவன் எண்ணெயில் விழுந்த அப்பம்போல் குதித்துக்கொண்டே, "பிள்ளைவாளின் வேலையைப் பார்த்தாயா?" என்றான் பக்கத்திலிருந்த வேலனிடம்.

"பிள்ளைக்கு இப்பொழுதே புத்தி கற்பிக்க வேண்டும்!" என்றான் வேலன்.

உடனே பெரியசாமியின் வீட்டிற்கு வந்து கதவை இடித்தான் மாரிமுத்து. சாவதானமாக வெளியே வந்த பெரியசாமி "என்ன மாரிமுத்து! என்ன விசேஷம்?" என்று கேட்டார்.

"தஞ்சாவூர்ப் போலீஸுக்கு லெட்டர் எழுதினது யாரு?"

"தஞ்சாவூர் போலீஸிற்கா? எந்த விஷயத்தைப் பற்றி ....?"

"எந்த விஷயத்தைப் பற்றியா? உனக்கு ஒன்றுமே தெரியாதோ? மாரியம்மன் கோயில் அலகுக் காவடியைப் பற்றித்தான். நீ ஜாக்கிரதையாக இருக்க வேண்டும், தெரியுமா? இந்த விஷயத்தில் யார் தலையிட்டாலும் தலை அவர்களுடையதில்லை என்பது ஞாபகமிருக்கட்டும்!"

"இந்தா, சும்மா சத்தம் போடாதே! விஷயத்தை விசாரித்து விட்டுச் சத்தம் போடு. ஒருத்தன் தலையை இன்னொருத்தன் வாங்குகிற வரையில் எவனும் சும்மா இருக்கமாட்டான், ஆமாம்!" என்றார் பிள்ளைவாள் பதிலுக்கு.

உண்மையில் அவர் ஒன்றுமே செய்யவில்லை. இதில் ஏதோ கலகம் வரப் போகிறது என்று மட்டும் பெரியசாமிப் பிள்ளை கொஞ்சம் ஜாக்கிரதையாயிருந்தார். அவர் வீட்டுக் கொல்லைப் புறத்தில் இருபது ஆட்கள் கம்புங் கையுமாக வந்து உட்கார்ந்து கொண்டார்கள்.

அன்றுதான் மாரியம்மனின் உற்சவம். எங்கே பார்த்தாலும் ஜனங்களின் கும்பல். சிறுவர்கள் வெள்ளை வேட்டியையும், வர்ணச் சட்டைகளையும் போட்டுக் கொண்டு அங்குமிங்குமாக நடந்துகொண்டிருந்தனர். வயோதிகர்கள் கழுத்தில் குழந்தைகளை வைத்துத் தூக்கிக்கொண்டு பக்தியோடு சென்று கொண்டிருந்தனர். ஸ்திரீகள் மாவிளக்கு மாவைப் புதுப் பாத்திரத்தில் வைத்து இலையால் மூடி, கையில் எடுத்துக் கொண்டு கோயிலை நோக்கிச் செல்லும் காட்சியே காட்சி!

எதிர்பாராதபடி கோயில் வாசலில் இரண்டு போலீஸ் லாரிகள் வந்து நின்றன. பொத்து பொத்தென்று ஐம்பது ஜவான்கள் இறங்கினார்கள். இறங்கி இருவர் இருவராகப் பிரிந்து அங்கங்கே நின்றார்கள்.

கோவில் நிர்வாகிகளுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. ஐம்பது ஜவான்கள்! அவர்களுடைய செந்தலையையும், கழுகுக் கண்களையும், கையிலிருந்த தடியையும் பார்த்த பொழுது வயிறு கலங்கியது.

திடீரென்று சோமு உள்ளே வந்து, "இன்று அலகுக் காவடி எடுக்க வேண்

டாம்; உள்ளே கட்டி வையுங்கள் !'' என்றான். மற்றவர்கள் அதற்குத் தடை சொல்லாமல் அலகுக் காவடியை எடுத்து உள்ளே வைத்து விட்டுச் சாதாரணக் காவடிகளுடன் ஆற்றங்கரையை நோக்கிச் சென்றார்கள்.

இந்த விஷயம் எப்படியோ பெரியசாமியின் கட்சியைச் சேர்ந்த ஒருவரின் காதில் விழுந்துவிட்டது. அவர் சும்மா இருப்பாரா? நேரே பெரியசாமியின் வீட்டிற்கு வந்தார். "பிள்ளைவாள் ! 'இந்த விஷயத்தில் யார் தலை யிட்டாலும் தலை அவர்களுடையதில்லை !' என்று பேசியவர் இன்று என்ன சொன்னார் தெரியுமா ? 'அலகுக் கட்டை எடுத்து உள்ளே போடு! வெறும் காவடி போதும்' என்கிறார் !''

அப்பொழுதும் பெரியசாமி சாந்தமாக, "நமக்கு என்னத்துக்கு வம்பு ? சிறு பிள்ளைகள் தானே ! அநுபவமானால் சரியாய்ப் போய்விடுகிறார்கள் !'' என்றார்.

"ஆமாம், செய்வதெல்லாம் செய்து விட்டுச் சிறு பிள்ளைகள் என்று பேச்சு வேறா ? உங்களை யெல்லாம் மாரியம்மன் கேட்காமல் விடமாட்டாள் !'' — இந்தக் குரலைக் கேட்டு இருவரும் திரும்பிப் பார்த்தார்கள். பின்னால் மாரிமுத்து நின்று கொண்டிருந்தான்.

இருவருக்கும் வாக்கு வாதம் முற்றியது. "உன்னைத் தொலைத்து விடுகிறேன் !'' என்றான் மாரிமுத்து.

"என்னைத் தொலைப்பதற்கு முன்பே, உன்னைக் கொளுத்தி விடுகிறேன் !'' என்று கூறி உள்ளே விரைந்தார் பிள்ளை.

மாரிமுத்து ஆற்றங்கரையை நோக்கிச் சென்றான்.

அப்பொழுது சோமு, வீட்டு முற்றத்தில் ஒரு பூதக் கண்ணாடியை வைத்து விளையாடிக் கொண்டிருந்தான்.

"என்னடா அது ?'' என்று தனக்கிருந்த கோபத்தை அவன் மீது காட்டினார் பெரியசாமி.

சோமு விழித்தான்.

"என்னடா கேட்கிறேன், பதில் சொல்லாமல் விழிக்கிறாய் ? கையில் என்ன ? எங்கே வாங்கினாய் ?''

"திருவிழாவிலே !''

"இதுமாதிரி யெல்லாம் ஒன்றும் வாங்காதே, காசைக் குட்டிச்சுவராக அடிக்காதே என்று உனக்கு எத்தனை தரம் சொல்லி யிருக்கிறேன் ?'' என்று அவன் முதுகில் இரண்டு அறை அறைந்து தன் கோபத்தைத் தீர்த்துக் கொண்டார் பெரியசாமி.

"ஐயோ ! அடிக்காதே, அப்பா ! இதோ எறிந்து விடுகிறேன், அப்பா !'' என்று கதறினான் சோமு.

"என்னடா, எறிந்தாயா ?''

"எறிந்து விட்டேன் !''

"மடியில் என்னடா, வட்டமா...''

"முறுக்கு !''

"எங்கே காண்பி.''

"இதோ !''

"சரி, போ !''

3

ஆற்றங்கரையிலிருந்து காவடி மந்தியானமாகக் கிளம்பி முக்கிய வீதிகளிலெல்லாம் சுற்றிக் கொண்டு வந்தது. காவடி கடைத் தெருவில் வந்தபோது சிலர் திடீரென்று ஒரே திக்கை நோக்கி ஓடினர்.

"எங்கேயோ நெருப்பாம் !'' என்றார் ஒருவர்.

அப்பொழுது மாரிமுத்துவின் வீடு பற்றி எரிந்து கொண்டிருந்தது. ஜனங்கள் 'ஹோ' என்று சப்தம் போட்டுக் கொண்டு வீதியில் நிறைந்திருந்தார்களே தவிர, யாரும் முன்னால் வந்து தீயை அணைப்பதற்கு முயலவில்லை.

"ஐயோ ! வீடு போச்சே !'' என்று ஸ்திரீகள் கதறினார்கள். குழந்தைகள் அழத் தெரியாமல் எரியும் வீடுகளைப் பரிதாபமாகப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். தீ இன்னும் இரண்டு வீடுகளுக்குப் பரவி விட்டது.

மாரிமுத்துவின் வீட்டில் பாதியையும், பக்கத்திலிருந்த நான்கு வீடுகளையும் சூறையாடி விட்டு அக்கினித்தேவன் போனான். தெருவெல்லாம் ஒரே வெப்பமாகவும், பண்டங்கள் எரிந்து கருகிய ஒருவித நாற்றமாகவும் இருந்தது.

மாரிமுத்து ஓடி வந்தான். வீட்டைப் பார்த்தான் வயிற்றில் அடித்துக் கொண்டு அழுதான். பக்கத்திலிருந்தவர்கள் தேறுதல் சொன்னார்கள். ஒருவர் அவனைத் தனியாக அழைத்துச் சென்று காதோடு ஏதோ இரகசியமாகச் சொன்னார். மாரிமுத்துவின் அழுகை ஓய்ந்தது. கண்கள் சிவந்தன. மீசை துடித்தது.

"என்ன ! என் வீட்டிற்குப் பெரியசாமியா நெருப்பு வைத்தான் ? ஒருவேளை தன் வீட்டிலும் தீப் பிடித்துக் கொண்டால் அணைப்பதற்குத் தயாராக ஆட்களை வேறு வைத்துக் கொண்டிருந்தானே அவனை விட்டேனா, பார் !'' என்று ஓடினான்.

கொஞ்ச நேரத்திற்கெல்லாம் கையில் கம்பு, அரிவாளோடு இருபது ஆசாமிகள் பெரியசாமி வீட்டை நோக்கி வந்தார்கள்.

பெரியசாமி வீட்டிலிருந்த இருபது பேர்களுக்கும் அவர்களுக்கும் கை கலந்தது. போலீஸாருக்கு இவ்விஷயம் எட்டியது. ஸப் இன்ஸ்பெக்டரும் பத்து ஜவான்களுமாக ஸ்தலத்திற்கு லாரியில் விரைந்து வந்து, கூட்டத்தில் புகுந்து தடியடிப் பிரயோகம் செய்ய ஆரம்பித்து விட்டார்கள்.

இரண்டு ஜவான்கள் தலை சிவப்பட்டார்கள். ஸப் இன்ஸ்பெக்டர் குத்திக் கீழே தள்ளப்பட்டார். இதைப் பார்த்ததும் அவரவர்கள் மனம் போனபடி ஓடத் தலைப்பட்டார்கள்.

ஸ்திரீகள் குழந்தைகளைத் தூக்கிக் கொண்டு வயல் வரப்புகளின் மேல் ஓடினார்கள். கடைக்காரர்கள் கடைகளைக் கட்டி விட்டு அருகிலிருந்த வீடுகளுக்குள் பதுங்கிக் கொண்டனர்.

மாலை ஐந்து மணி இருக்கும். மூன்று போலீஸ் லாரிகள் வந்து பெரியசாமிப் பிள்ளை வீட்டு வாசலில் நின்றன. அதிலிருந்து இறங்கிய தஞ்சாவூர் ஸ்பெஷல் போலீஸ் வீரர்கள் தங்கள் கை வரிசையைக் காட்ட ஆரம்பித்தனர்.

வழியிலே கண்டவர்களையெல்லாம் அவர்கள் கைக் கழியினால் விசாரிக்கத் தொடங்கினார்கள்.

இரவு எட்டு மணிக்கு இந்த விழா முடிந்தது. பிறகு போலீஸார் குடியானவத் தெருவிலிருந்த சில வீடுகளுக்குள் புகுந்து சுமார் ஐம்பது பேர்களைக் கைது செய்து தஞ்சாவூருக்குக் கொண்டு சென்றார்கள்.

மறுநாள் பத்திரிகைகளிலெல்லாம் கலக விவரம் அல்லோல கல்லோலப் பட்டது.

இரண்டு நாட்களுக்குப் பிறகு, பெரியசாமிப் பிள்ளையும், மாரிமுத்துவும் ஜாமீனில் விடப்பட்டார்கள்.

தஞ்சாவூர் கோர்ட்டில் வழக்கு ஆரம்பமாயிற்று. பெரியசாமி சென்னையிலிருந்து பெரிய பெரிய வக்கீல்களையெல்லாம் தருவித்திருந்தார்.

வழக்கு இருபது நாட்கள் தொடர்ந்து நடந்தது. மறுநாள் வழக்கு முடிவு வெளியாயிற்று. மூவர் மரண தண்டனை விதிக்கப்பட்டனர். ஆறு பேர்களுக்கு ஆயுள் தண்டனை. பதினொரு பேர்களுக்கு ஏழு வருஷம் கடுங்காவல். மாரிமுத்துவும் பெரியசாமியும் விடுதலையானார்கள்.

இந்த வழக்கிற்கான பணச் செலவு இவர்கள் இருவர் தலையில்தான் விழுந்தது. கிராமத்தார் தங்கள் பாஷையில் "செலவு நாற்பது ரூபாய்க்குக் குறையவில்லை!" என்று பேசிக் கொண்டார்கள்.

அன்று இரவு பெரியசாமியைப் பார்ப்பதற்கு, அந்த ஊர் போஸ்ட் மாஸ்டரும், ஆரம்பப் பள்ளிக்கூட உபாத்தியாயருமான சங்கரய்யர் வந்தார். அவர் கலகத்தைப் பற்றிப் பெரியசாமியிடம் பேசிக் கொண்டிருக்கும்போது, "இத்தனை கலகத்திற்கும் ஆதிகாரணம் யார் தெரியுமா? ஆயுள் தண்டனை அடைந்திருக்கிறானே, ரத்தினம், அவன்தான்!" என்றார்.

"எப்படி?" என்று ஆச்சரியத்தோடு கேட்டார் பெரியசாமி.

"தஞ்சாவூர்ப் போலீஸிற்கு அவன்தான் கடிதம் எழுதிப் போட்டவன். 'நமக்கென்ன?' என்று நானும் அனுப்பினேன்!" என்றார் சங்கரய்யர்.

"அப்படியானால் மாரிமுத்துவின் வீட்டிற்கு நெருப்பு வைத்ததும் அவனாகவே இருக்கலாமோ?"

"கடவுளுக்குத்தான் தெரியும்!" என்று கூறிச் சென்றார் சங்கரய்யர்.

• • •

மறுநாள் காலை சண்டைக்குப் பிறகு சமாதானமடைந்த மாரிமுத்துவும், பெரியசாமியும், மாரிமுத்துவின் வீட்டுக் கொல்லைப்புறத்தில் நின்று பேசிக் கொண்டிருந்தார்கள்.

"நியாயாதிபதியால்கூட உன்னுடைய வீட்டிற்கு நெருப்பு வைத்தது யார் என்று கண்டு பிடிக்க முடியவில்லையே?" என்றார் பெரியசாமி.

"யார் வைத்தார்களோ?" என்று மாரிமுத்து முனகிக் கொண்டே எரிந்து கிடந்த கம்புகளில் ஒன்றை இழுத்தான். அப்பொழுது ஏதோ ஒரு வஸ்து கீழே விழுந்தது.

"அது என்ன? எடு!" என்றார் பெரியசாமி.

மாரிமுத்து அதை எடுத்துப் பெரியசாமியின் கையில் கொடுத்தான்.

பிள்ளைக்குத் தலை சுழன்றது. அதை எடுத்துக்கொண்டு வீட்டிற்கு விரைந்தார். தன் பையன் சோமுவை அழைத்துச் சாவதானமாக, "அன்று எறிந்து விட்டேன் என்று சொன்னாயே, அந்தப் பூதக் கண்ணாடியை எங்கே எறிந்தாய்?" என்று கேட்டார்.

"வீதியில் நின்று வீசி எறிந்தேன். அது மாரிமுத்து அண்ணன் வீட்டுக் கூரை மேல் விழுந்தது!" என்றான் பையன்.

"புத்திசாலிதான், போ!" என்றார் பெரியசாமிப் பிள்ளை.

ஆனாலும், மேற்படி வழக்கில் தண்டிக்கப்பட்டவர்கள் மட்டும் 'விதியே' என்று தண்டனையை அநுபவித்துக் கொண்டுதான் இருந்தார்கள்!



காலக்ஷேபம்

காரணம்!

ஒருவர் :—நடேசச் செட்டியார் தங்களை ரொம்ப விசாரித்ததாகச் சொன்னார்.

மற்றவர் :—அவன் கிடக்கிறான், அற்பப் பயல்! ஏதோ ஐந்து ரூபாய் கடன் கொடுத்த தற்காகச் சதா விசாரித்துக் கொண்டே இருக்கிறான்! —பி. கே. கிருஷ்ணமூர்த்தி.

★

உண்மை

தகப்பனார் (உபாத்தியாயரைப் பார்த்து):—என் ஸார், என் மகன் மேல் வகுப்புக்குப் போய்விடுவானா?

உபாத்தியாயர் :—நிச்சயமாய் மேல் வகுப்புக்குப் போய் விடுவான். அவனுடைய பழைய வகுப்பு கீழ்க் கட்டடத்திலிருந்து மேல் கட்டடத்திற்கு மாற்றப்பட்டிருப்பதால் அவன் மேல் வகுப்புக்குப் போய்த்தான் தீர வேண்டும். —டி. ஆர். லக்ஷ்மிநாராயணன்.

★

யோக்கியன்

ஒருவன் (மற்றவனிடம்):—திருடியதற்காகச் சிறை சென்ற என் மகனைச் சிறையில் ஒழுங்காக நடந்து கொண்டதால் ஆறு மாதம் முன்னதாகவே விடுதலை செய்திருக்கிறார்கள்.

மற்றவன் :—உன் மகன் யோக்கியமானவன் என்று எனக்கு அப்பொழுதே தெரியுமே!

—ஆர். எல்.

★

எப்படி முடியும்?

சைக்கிள் வியாபாரி:—ஏன், நீர் என்னுடைய சைக்கிளைப் பணம் கொடுத்து வாங்கக் கூடாதா?

நண்பர் :—இல்லை; நான் என் பணத்துக்கு நிலமும், பசு மாடுகளும் வாங்கப்போகிறேன்.

சைக்கிள் வியாபாரி :—நீர் இந்த சைக்கிளை வைத்துக்கொண்டு நிலம் பூராவும் சுற்றிப் பார்க்கலாமே! பசுமாட்டின் மேல் ஏறி அவ்விதம் சுற்றிப் பார்க்க முடியுமா?

நண்பர் :—நீர் சொல்வது சரிதான். ஆனால் சைக்கிளை வைத்துக்கொண்டு எப்படிப் பால் கறக்கிறது? —ச. சுப்பையா.

★

இருக்க முடியுமா?

சாஸ்திரிகள் :—பாருங்கள்! எனக்கு 96 வயதாகப் போகிறது: ஆனால் 'விரோதி' என்று யாருமே கிடையாது.

நண்பர் :—எப்படி இருப்பார்கள்? எல்லோரும் இறந்து விட்டிருக்க மாட்டார்களா!

—அ. வேணுகோபால்.

நியாயம் இல்லைதான்!

வீட்டுக்காரர் (மாடியிலிருந்து மூட்டையைத் தூக்கிக்கொண்டு இறங்கும் திருடனை வழி மறித்து) :—அந்த மூட்டையை அப்படியே வைத்து விட்டு வெளியே ஓட்டம் பிடி. இல்லாவிட்டால் மண்டையைப் பிளந்து விடுவேன்!

திருடன் :—ஐயா! இது நியாயமா? இதெல்லாம் பக்கத்து வீட்டில் திருடினது, ஐயா!

—க. தங்கம்

★

பயந்தவன்

போலீஸ் அதிகாரி (திருடனை):—ஏய்! எவ்வளவு தைரியமிருந்தால் நீ பகலில் கொள்ளையடிக்கத் துணிவாய்?

திருடன் :—இல்லீங்களே: நான் ரொம்பவும் பயந்தாங் கொள்ளிங்க. தைரிய மிருந்தா ராவுலே வரமாட்டேனுங்களா?

—ஏ. ஆர். பங்கஜம்

★

கடமை

"திருடர்களுக்கு இதனால் அறிவித்துக் கொள்ளுவது என்னவென்றால், இரவில் இந்தக் கதவைப் பெயர்க்க முயன்று, கதவில் ஓடிக் கொண்டிருக்கும் மின்சாரம் காரணமாக உங்கள் உயிரை இழக்க வேண்டாம்" என்று ஒரு பாங்கியின் வாயிலின் முன்பு ஒரு அறிக்கை காணப்பட்டது.

சில நாட்களுக்குப் பிறகு அந்த அறிக்கையின் கீழ் மற்றொரு அறிக்கை காணப்பட்டது:

"இந்த அறிக்கையைக் கண்டு நாங்கள் சுவரில் கன்னம் வைத்து எங்கள் உயிரைக் காப்பாற்றிக் கொண்டோம். ஆகவே இந்த அறிக்கையை ஒட்டியவருக்கு நாங்கள் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறோம்."

—ரா. சுப்ரமண்யம்.

★

நல்ல யோசனை!

புருஷனும் மனைவியும் முதல் மாடியின் ஜன்னல் அடியில் நின்று வாக்கு வாதம் செய்து கொண்டிருந்தார்கள்.




மனைவி :— நீங்கள் என்னை ரொம்ப அலட்சியம் செய்கிறீர்கள். என் மனதைப் புண்படுத்துகிறீர்கள். இன்னும் ஒரு வார்த்தை சொன்னீர்களானால் இப்படியே ஜன்னல் வழியாகக் கீழே விழுந்து விடுவேன்.

புருஷன் :— சரி, சரி: மேல் மாடிக்கு வா. இன்னும் கொஞ்ச உயரத்திலிருந்து சண்டையைத் தீர்த்துக் கொள்ளலாம்.

—என். ராகவேந்திர ராவ்

FAVRE - LEUBA

உலகத்தில் சரியான காலத்தை அறிவிக்கும் நேர்த்தியான கடிகாரத்தின் உன்னத வேலைப்பாட்டைக் குறிக்கும் சின்னம் இது.



தற்சமயம் புகழ் பெற்ற பேவர் லூபா கடிகாரங்கள் கிடைப்பது மிகவும் அரிதாயுள்ளது...... உங்களை காத்திருக்கச் செய்ததற்காக மன்னிப்பைக் கோருகிறோம்...... ஆனால் ஒரு நாள் வேண்டிய மட்டும் பேவர் லூபா கடிகாரங்கள் வாங்கக் கிடைக்கும். ஒப்பற்ற அழகுடன் நீடித்து உழைக்கக்கூடிய ஒரு கடிகாரத்தை அடைந்து நீங்கள் மிகவும் பெருமையடைவீர்கள்.

FAVRE-LEUBA

பேவர்-லூபா & கம்பெனி லிமிடெட் ★ பம்பாய் ★ கல்கத்தா

Ad. No. 175.

ஆமையும் ஐஸ்கிரீமும்

மாலு

ஒரு காட்டில் இரண்டு பெரிய ஆமைகளும் ஒரு குட்டி ஆமையும் வசித்து வந்தன. திடீரென்று ஒரு நாள் அவைகளுக்கு ஐஸ்கிரீம் சாப்பிட வேண்டும் என்ற ஆசை உண்டாயிற்று. பக்கத்தில் உள்ள ஓட்டலுக்குச் சென்று தலைக்கு இரண்டு ஐஸ்கிரீம் கொண்டு வரச் சொல்லி விட்டு நாற்காலியில் உட்கார்ந்து கொண்டன.


"மூன்று ஐஸ்கிரீம்கள்தான் இருக்கின்றன. தலைக்கு ஒன்றுதான் கிடைக்கும்" என்று ஹோட்டல் சிப்பந்திக் குரங்கார் பதில் சொன்னார்.

"அப்படியானால் ஆளுக்கு ஒரு ஐஸ்கிரீம் கொண்டு வா!" என்றது பெரிய ஆமை.

இந்தச் சமயத்தில் இடியும் மின்னலுமாக மழை வரும்போல் இருந்தது. "ஐஸ்கிரீம் சாப்பிடுவதற்குள் மழை வந்து விட்டால் என்ன செய்வது?" என்று பெரிய ஆமைகள் இரண்டும் யோசித்தன. குட்டி ஆமையை வீட்டிற்கு அனுப்பிக் குடையை எடுத்து வரச் சொல்லுவது என்று தீர்மானித்துக் குட்டி ஆமையைப் பார்த்து "நீ சீக்கிரம் வீட்டுக்குப் போய்க் குடையை எடுத்துக் கொண்டு ஓடி வா!" என்று சொல்லி அனுப்பின.

ஆமைக் குட்டிக்குச் சந்தேகம் வந்து விட்டது. ஒரு வேளை தான் திரும்பி வருவதற்குள் தன்னுடைய ஐஸ்கிரீமையும் சாப்பிடுவதற்குத்தான் இந்த யோசனை போலிருக்கிறது என்று பயந்து "நான் ஐஸ்கிரீமைச் சாப்பிட்டு விட்டுப் போகிறேன்" என்று கூறிற்று.

"ஐஸ்கிரீமைச் சாப்பிட்டு விட்டுப் போவதற்குள் மழை வந்து விடும். அப்புறம் எல்லோரும் நனைய வேண்டி வரும். நாங்கள் உன்னுடைய ஐஸ்கிரீமைப் பத்திரமாக வைத்திருக்கிறோம். நீ போய்க் குடையை எடுத்துக் கொண்டு வா!" என்றது பெரிய ஆமைகளில் ஒன்று.



தன்னுடைய ஐஸ்கிரீமைத் தொடுவதில்லை என்று பெரிய ஆமைகளிடம் வாக்குறுதி வாங்கிக் கொண்டு அரை மனதுடன் வீட்டிற்குப் போய்க் குடையை எடுத்து வர ஒப்புக் கொண்டது குட்டி ஆமை.

ஆமைக் குட்டி வீட்டிற்குப் போய் இரண்டு மணி நேரத்துக்கு மேலாகியும் திரும்பி வரவில்லை. மேஜைமேல் இருக்கும் ஆமைக் குட்டியின் ஐஸ்கிரீமை எத்தனை நாழிகைதான் சும்மா பார்த்துக் கொண்டிருக்க முடியும்? பெரிய ஆமைகள் இரண்டுக்கும் நாக்கில் ஜலம் ஊற ஆரம்பித்து விட்டது.

இரண்டு ஆமைகளும் வாய் பேசாமல் ஐஸ்கிரீமைப் பார்ப்பதும் ஒன்றின் முகத்தை மற்றொன்று பார்ப்பதுமாகச் சிறிது நேரம் உட்கார்ந்து கொண்டிருந்தன.

கடைசியில் ஒரு ஆமை மனதைத் தைரியப்படுத்திக் கொண்டு, "இந்த ஐஸ்கிரீமை நாம் இருவரும் சாப்பிட்டு விட்டால் என்ன?" என்று கேட்டது.

"நானும் அதைத்தான் இத்தனை நாழியாக யோசித்துக் கொண்டிருந்தேன். இந்த ஐஸ்கிரீமை நாம் இரண்டு பேருமாகச் சாப்பிட்டு விட்டுக் குட்டி ஆமை வந்து கேட்டால் பனிச்சென்று கரைந்து போய் விட்டதாகப் பதில் சொல்லி விடலாம்" என்றது இன்னொரு ஆமை.

"என் ஐஸ்கிரீமைச் சாப்பிட்டீர்களோ, நான் இந்த இடத்தை விட்டே போக மாட்டேன்!" என்று சொல்லிக் கொண்டே அதுவரையில் பெரிய ஆமைகள் தன்னுடைய ஐஸ்கிரீமைச் சாப்பிடுகின்றனவா என்று பார்த்துக் கொண்டே கதவு இடுக்கில் ஒளிந்து கொண்டிருந்த குட்டி ஆமை வெளியே வந்தது.

குட்டி ஆமையைப் பார்த்த இரண்டு பெரிய ஆமைகளும் அசடு வழிய ஒன்றை ஒன்று பார்த்துக் கொண்டன!

'பஞ்சஸ்தான்' கடிதம்

சாவி

பிரிட்டிஷ் மந்திரி சபையிலிருந்து வந்திருக்கும் மூன்று மந்திரிமார்களுக்கு இந்தியா தேசத்தில் தொன்று தொட்டு காலமாய் வாழ்ந்து வரும் ஸ்ரீமான் இந்தியப் பஞ்சம் எழுதிக்கொள்வது:—

மந்திரிமார்களே!

நமஸ்காரம்; இப்பவும் நீங்கள் இந்தியா தேசத்துக்கு வந்து ஒரு மாத காலத்துக்கு மேல் ஆகிறது. இதற்குள் இந்த நாட்டிலுள்ள சகல கட்சிகளையும் கூப்பிட்டுப் பேட்டி கொடுத்திருக்கிறீர்கள்.

பத்து கோடி மூஸ்லிம்களுக்குப் பிரதிநிதி என்று சொல்லிக்கொண்டு 'பாகிஸ்தான்' கேட்கும் ஜனாப் ஜின்னாவை அழைத்துப் பேசுகிறீர்கள். அதே சமயத்தில் எத்தனையோ கோடி மக்களுக்குப் பிரதிநிதியாக உள்ள என்னை உதாசீனப்படுத்துகிறீர்கள். இது என்ன நியாயம்?

தாது வருஷத்துப் பஞ்சம் என்றும் வங்காளப் பஞ்சம் என்றும் நீங்கள் கேள்விப் பட்டதில்லையா?

தாது வருஷப் பஞ்சத்திலும், வங்காளப் பஞ்சத்திலும் என் கட்சியில் சேர்ந்து எத்தனையோ லட்சம் பேர்கள் உயிர்த் தியாகம் செய்திருக்கின்றனர். அவர்களுக்கெல்லாம் நான்தானே பிரதிநிதி? இப்போது சென்னை மாகாணத்தைக்கூட என்னுடைய ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வர முயற்சி செய்து கொண்டிருக்கிறேன்.

அப்படியிருக்க என்னுடைய பஞ்சக் கட்சியும் ஒரு முக்கியமான கட்சிதானே! எனக்கும் இந்த இந்தியா தேசத்தில் வாழ உரிமை இருக்கிறதல்லவா?

ஜனாப் ஜின்னாவுக்குப் பாகிஸ்தான் கொடுப்பதற்கு என்னென்ன நியாயமான காரணங்கள் இருக்கின்றனவோ அதே மாதிரி எனக்குப் 'பஞ்சஸ்தான்' கொடுப்பதற்கும் எத்தனையோ நியாயமான காரணங்கள் இருக்கின்றன. அவருக்குப் பாகிஸ்தான் கொடுப்பதில் ஆபத்து இல்லை என்றால் எனக்குப் பஞ்சஸ்தான் கொடுப்பதிலும் ஆபத்து இல்லைதான்.

முஸ்லிம் லீக் ஒரு பெரிய மைனாரிடி கட்சி ஆகையால் அதற்குப் பிரிந்து போகும் உரிமை வேண்டும் என்றால் அதே மாதிரி நானும் ஒரு பெரிய மைனாரிடி கட்சிதான். எனவே, எனக்கும் பிரிந்து போகும் உரிமை உண்டு. மெஜாரிடி கட்சி யாருக்கு அடங்கி வாழ நான் சம்மதியேன்.

அதிலும் காங்கிரஸ்காரர்கள் ஆட்சிக்கு வந்து விட்டால் அப்புறம் என்னைத் தலை காட்ட முடியாதபடி செய்து விடுவார்கள்.

ஆகையால், வங்காளத்தையும் சென்னை மாகாணத்தையும் பிரித்துப் 'பஞ்சஸ்தான்' கொடுத்து விடுங்கள்.

கல்கத்தாவைத் துறைமுகப் பட்டணமாகப் பாகிஸ்தான் ராஜ்யத்தில் சேர்க்க வேண்டும் என்று ஜனாப் ஜின்னா சமீபத்தில் பேசி விருப்பதாகத் தெரிகிறது. வங்காளப் பஞ்சம் என்று சொல்லும் போதே வங்காளத்திலுள்ள கல்கத்தாவும் இயற்கையாக என்னுடைய பஞ்சஸ்தானைத் தான் சேரும் என்பது தெரியவில்லையா? போதாததற்கு எனக்குத் தனி ராஜ்யம் ஏற்பட்டால் நான் அயல்நாடுகளுடன் தொடர்பு வைத்துக் கொள்ள எனக்கு ஒரு துறைமுகப் பட்டணம் அவசியம்தானே? அப்படியிருக்க ஜின்னா கல்கத்தாவைக் கேட்பது என்ன நியாயம்?

இதை நான் ஒரு நாளும் ஒப்புக் கொள்ள மாட்டேன். பஞ்சஸ்தான் ராஜ்யத்துக்குள் தான் அது இருக்க வேண்டும்; இதை மீறிக் காரியம் நடந்தால் என்னுடைய முழு சக்தியையும் கொண்டு அதை எதிர்ப்பேன். உள் நாட்டுக் கலகம் ஏற்பட்டால் அதற்காக ரத்தம் சிந்தவும் தயார்.

ஆகையால் நானும் இந்த தேசத்தில் வாழும் ஒரு முக்கிய மைனாரிடி கட்சி என்பதை இப்போதாவது உணர்ந்து எனக்கு அழைப்பு அனுப்புங்கள். உங்களுடன் எந்த நிமிஷமும் 'பஞ்சஸ்தான்' விஷயமாக வந்து விவரமாகக் கலந்து பேசத் தயாராயிருக்கிறேன்.

என் பேச்சைக் கேளாமல் என்னை அலட்சியம் செய்து விட்டு ஜின்னாவின் 'பாகிஸ்தான்' கோரிக்கைக்கு இணங்கினீர்களோ, அவ்வளவுதான்! அப்புறம் இந்தியா தேசம் முழுதும் பஞ்சத்துக்கு அடிமையாகி மாண்டு மடிந்து போக நேரிடும். பிற்பாடு பாகிஸ்தானும் கிடையாது; ஹிந்துஸ்தானும் கிடையாது; பிரிட்டிஷ் ஆட்சியும் கிடையாது; எங்கும் ஒரே 'பஞ்சஸ்தான்' ஆட்சிதான். உஷார்! உஷார்!! உஷார்!!! சொன்னேன்; சொல்லிவிட்டேன்.

இப்படிக்கு
ஸ்ரீமான் இந்தியப் பஞ்சம்.

காலை வேளை முதலீடு



காலை பத்து மணிக்கு ஒரு கப் டீ! ஆபீஸில் வேலை செய்பவராயிருந்தாலும் சரி, வீட்டு வேலை செய்பவராக இருந்தாலும் சரி, தொழிலாளியாக இருந்தாலும் சரி, சித்திர வேலைக்காரராக இருந்தாலும் சரியே, ஒரு கப் டீ அருந்தியவுடன் என்ன ஆனந்தம்! புது ஊக்கத்தை யளிக்க அத்தகைய சிறந்த முதலீடு.

இருப்பினும், டீயை தவறுமல் அருந்துவோர் பலர் நல்ல டீ தயாரிக்கும் சில சுலபமான முறைகளை பின்பற்ற தவறுவதால் அதன் பூரா உபயோகத்தையும் பெறுவதில்லை.

களைப்பாகவோ, கவலையாகவோ, தனிமையாகவோ இருக்கும் வேளைகளில் டீ யின் உதவியை நாடுங்கள். ஆனால் முறையோடு நன்கு தயாரிக்கப்பட்ட டீயாக இருக்கட்டும்.

நல்ல டீ தயாரிக்கும் முறை

1. கெட்டிலில் டீ காய்ச்சக்கூடாது. டீ பாத்திரத்தை உபயோகியுங்கள்.
2. உலர்ந்த டீயை பாத்திரத்தில் போடும்போது பாத்திரம் ஈரமில்லாமல் இருக்கவேண்டும். அப்பொழுதுதான் நறுமணமுள்ள கஷாயம் கிடைக்கும்.
3. கப்புக்கு ஒரு டீ ஸ்பூன் வீதமும், பாத்திரத்துக்காக ஒரு டீ ஸ்பூனும் டீ போடவும்.
4. புதிதாக காய்ச்சிய நீரையே உபயோகிக்கவும்; ஒரு தரம் காய்ச்சிய நீரையோ, அதிகமாகவோ அல்லது குறைவாகவோ காய்ச்சப்பட்ட நீரையோ ஒருபோதும் உபயோகிக்காதீர்கள். தள தள வென்று குமிழியிட்டு கொதிக்கும் நீர் தான் சரியாக காய்ச்சின நீர்.
5. கஷாயம் இறங்க குறைந்தது 5 நிமிஷ கால நேரம் வேண்டும்.
6. பாத்திரத்தில் இருக்கையிலேயே பால் சர்க்கரை சேர்க்காதீர்கள்; கப்புகளில் விட்ட பிறகு சேர்க்கவும்.

எந்நேரமும்

டீ

டீ அருந்தும் நேரம்

இந்தியன் டீ மார்க்கெட் எக்ஸ்பான்ஷன் போர்டாரால் வெளியிடப்பட்டது.

IK-247-ATH

கம்பர் தரும் காட்சி

டி.கே.சி

138. வருகிறது சிம்மம்!

ராமனைத் தாக்க வந்த அரக்க வீரர்கள் பதினாலு பேரும் நிர்மூலமானார்கள் என்பது ராமனுக்குத் தெரியும்.

இப்போது பெரிய சேனையாக அரக்கர் சேனை வருகிறது. எப்படி வருகிறது?

மரங்கள் அடர்ந்த காட்டை அடைத்து வருகிறது. அப்படி நடந்து வந்ததின் காரணமாக காடு என்ன ஆயிற்று? மரம் செடிகள் எல்லாம் நொறுங்கிப் போய், பண்படுத்திய ராஜபாட்டையாகவே ஆகிவிட்டது.

சேனையா வருகிறது! சரி சரி, கரன் செலுத்தி வருகிற சேனைதான் இது என்று தெரிந்து கொண்டான் ராமன்.

மரன்படர் கானம்எங் கும்
அதர்பட வந்தசே னை,

கரன்படை என்பதென் னாக்
கருநிறக் கமலக்கண் ணன்,

சரன்படர் புட்டில்கட் டிச்
சாபமும் தரித்தான்,தன் னா

உரன்படர் தோளின்மீ து
கவசம்இட்(டு) உடைவாள்
ஆர்த் தான்.

[மரன் படர் கானம் எங்கும்: மரங்கள் அடர்ந்த காடெல்லாம்; அதர் பட வந்த சேனை: செப்பனிட்ட பாதை போல் ஆகும்படி நடந்தேறி வந்த சேனையானது; கரன்படை என்பது என்னா: கரன் செலுத்தி வரும் படை என்பதை அறிந்து கொண்டு; கருநிறக் கமலக் கண்ணன்: நீலமேனியனான ராமன்; சரன் படர் புட்டில் கட்டி: அம்பு நிறைந்த அம்புறாத்தூணியை வலது தோளில் கட்டி; சாபமும் தரித்தான்: வில்லையும் இடது கையில் ஏந்தினான்; தன்னா உரன் படர் தோளின் மீது கவசம் இட்டு: என்றும் குறையாத வலி கொண்ட தோளின் மீது கவசத்தை அணிந்து; உடைவாள் ஆர்த்தான்: அரையில் உடை வாளையும் கட்டிக் கொண்டவன் — உடைவாளை ஆர்த்த பிறகு சாபம் தரித்தான்.]

இந்த விதமாக ராமன் யுத்த சன்னத்தன் ஆகிறதைப் பார்த்தான் லக்ஷ்மணன். அவனுடைய வீரம் அவனையே மீறி மேலே கிளம்புகிறது; ராமனைப் பார்த்துப் பேசுகிறான்:

"எந்த விதத்திலும் பின் வாங்க மாட்டார்கள் என்று சொல்லும்படியான வானவர்கள் என்ன, இந்த உலகத்தி லுள்ள வீரர்கள் என்ன, எல்லோரும் யுத்தம் செய்ய வரட்டும். வந்தால், அவர்களுக்கு ஏற்பட்ட வாழ் நாள் தீர்ந்து ஒழிவது நிச்சயம். இதை நான் உனக்கு எடுத்துச் சொல்லவும் வேண்டுமா?"

மீளரும் செருவில்விண் ணும்
மண்ணும்மென் மேல்வந்தா லும்

நான்உலந்(து) அழியும்அன் றே.
நான்உனக்(கு) உரைப்பதென் னே?

ஆளியின் துப்பினாய்! இவ்
அமர்எனக்(கு) அருளி,நின்(று)என்

தோளினைத் தின்றுஇன் ற
சோம்பினைத் துடைத்தி!என் றான்.


[மீளரும் செருவில்: எந்த விதத்திலும் பின் வாங்காது எதிர்த்துச் செய்யும் போரில்; விண்ணும் மண்ணும்: வானத்திலுள்ள வீரரும் பூமியிலுள்ள வீரரும் சேர்ந்து; மென் மேல் வந்தாலும்: மேலுக்கு மேல் அடர்ந்து வந்தாலும்; நான் உலந்து அழியும் அன்றே: ஜாதகத்தில் நீண்ட ஆயுள் குறித்திருந்த போதிலும், அப்பொழுதே காலம் அழிந்து விடும் அவர்களுக்கு; ஆளியின் துப்பினாய்: சிம்மத்தின் வலி கொண்டவனே; இவ் அமர் எனக்கு அருளி நின்று: இந்தப் போரை எனக்குக் கொடுத்து விட்டு நீ கொஞ்சம் சும்மா இருந்து; என் தோளினைத் தின்று இன்ற சோம்பினை: என் தோளை அரிக்கிற சோம்பல் காரணமான தினவை; துடைத்தி என்றான்: தயவு செய்து நீக்கவேண்டும் என்றான்.

குறிப்பு:—சற்று முந்தி வந்த பதினான்கு அரக்கரை ராமனே போர் செய்து கொன்றான். அதுவே பிடிக்க வில்லை லக்ஷ்மணனுக்கு. இப்போது வந்த போரையாவது தனக்குக் கொடுக்க வேண்டும் என்று நயந்து சொல்லுவதில், லக்ஷ்மணனது அபூர்வமான இயற்கை வீரம் வெளிப்படுகிறது. ஆம், தோளில் உண்டான தினவை அவனால் தாங்க முடியவில்லை.]

தானே போர் செய்வேன் என்று லக்ஷ்மணன் சொன்னான். ராமன் அதற்கு இணங்கவில்லை. மேலும் ராமனுடைய திறத்தைத் தெரிந்தவன் தானே லக்ஷ்மணன்?

என்றனன் இளைய வீ ரன்:
இசைந்திலன் இராமன்,அன் னான்

குன்றனை தோளின்ஆற் றல்
உள்ளத்தின் உணரக்கொண் டான்;



கருவேலி மிராசுதார் ஸ்ரீ ஆர். வெங்கட்ராமய்யர் குமாரரும் 'கல்கி' காரியாலய ஏஜன்ஸி இலாகா மானேஜருமான ஸ்ரீ வெ. வைத்தியநாதன் அவர்களுக்கும் தஞ்சாவூர் அட்வகேட் ஸ்ரீ ஆர். வெங்கட்ராமய்யர் புதல்வி செளபாக்யவதி மீனாக்ஷிக்கும் சென்ற 14-4-46 ஞாயிற்றுக்கிழமை யன்று கும்பகோணத்தில் விவாகம் இனிது நடந்தேறியது. அநேக வாழ்த்துத் தந்திகளும், பரிசுகளும் தம்பதிகளுக்கு வந்து குவிந்தன. பல பிரபலஸ்தர்கள் விஜயம் செய்து தம்பதிகளை ஆசீர்வதித்தனர்.

அன்றியும் அண்ணல்ஆ ணை
மறுக்கிலன் ;—அங்கைகூப் பி

நின்றனன் இருந்தான், கண் ணீர்
நிலனுறப் புலர்கின்றான் பால்.

[என்றனன் இளைய வீரன்: மேலே சொன்னபடி லக்ஷ்மணன் சொன்னான்; இசைந்திலன் ராமன்: ஆனால் ராமன் இணங்கவில்லை; அன்னான் குன்றனை தோளின் ஆற்றல்: அந்த ராமனது மலைபோன்ற தோள்வலியை; உள்ளத்தின் உணரக் கொண்டான்: ஞாபகத்திற்கு வரவும் உணர்ந்து கொண்டான்; அங்கை கூப்பி நின்றனன் இருந்தான்: கையைக் கூப்பிய வண்ணமாய் அப்படியே நின்று விட்டான்; கண்ணீர் நிலனுறப் புலர்கின்றான் பால்: கண்ணீர் நிலத்தில் சொட்ட பயத்தினால் உடம்பெல்லாம் வெதும்புகிற சீதையின் பக்கத்தில்-நின்றனன்: இருந்தான்.

குறிப்பு:—ராமனுடைய திறம் ஞாபகத்திற்கு வந்ததும், யாதொரு வார்த்தையும் பேசாமல் சீதையைக் காப்பதுதான் தன்னுடைய கடமை என்பதை லக்ஷ்மணன் உணர்ந்தான். லக்ஷ்மணனது மன நிலையையும் செயலையும் செய்யுளின் உருவத்திலப் பார்க்கலாம்.]

வாடிய முகத்தவளாய் நிலை குலைந்து சோருகிறாள் சீதை: இந்த நிலையில் வில் ஏந்திய மேருகிரி போல் சாலையினின்றும் வெளியே வருகிறான் ராமன்.

குழையுறு மதியம்பூத் த
கொம்பனாள் குழைந்துசோ ரத்,

தழையுறு சாலைநின் றும்
தனிச்சிலை தரித்தமே ரு,

மழையென முழங்குகின் ற
வாள்எயிற்(று) அரக்கர்கா ண,—

முழையினின்(று) எழுந்துசெல்லும்
மடங்கலின், முனிந்துசென் றான்.

[குழையுறு மதியம் பூத்த கொம்பனாள்: நிலைகப்பொறு வதங்கிய சீதையின் முகம் குழையுற்ற மதியம்போல் இருந்தது—அந்த வைய சந்திரனைப் பூத்த பூங்கொம்பை ஒத்தவளான சீதை; குழைந்து சோர: மெய்நடுங்கிச் சோர்வடைய — தழையுறு சாலை நின்றும் தனிச் சிலை தரித்த மேரு: கொடி படர்ந்த பர்ணசாலையிலிருந்து பெரிய வில்லை ஏந்திய மேரு மலைக்கு ஒப்பான ராமன்; மழையென முழங்குகின்ற அரக்கர் காண: இடிபோல் முழங்கும் அரக்கர் கண்ணில் படும்படியாக; வாள் எயிற்று: பெரிய பல்லைக் கொண்ட; முழையின் நின்று எழுந்து செல்லும் மடங்கலின்: குகையிலிருந்து வரும் சிம்மத்தைப் போல; முனிந்து சென்றான்: கோபாவேசத்தோடு வெளியே வந்தான்—அரக்கர் காண.]

குழைந்த மதிவதனத்தோடு சீதை நிற்பதும், பக்கத்தில் லக்ஷ்மணன் குவித்த கையோடு நிற்பதும், சிம்மம் போல் ராமன் சாலையினின்று வெளி வருவதும் அரிய சித்திரக் காட்சிதான்.



திருதராஷ்டிரன்

சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்

விருத்தனான திருதராஷ்டிர ராஜன் பீமனுடைய வார்த்தைகளால் மிகவும் வருத்தமடைந்தான். யுதிஷ்டிரன் உத்தரவுப்படி ஹஸ்தினபுரத்தில் எவ்வளவு சுக சௌகரியங்கள் அமைக்கப்பட்டு வந்தாலும் அவனால் அவற்றில் மனம் செலுத்த முடியாமல் போயிற்று. பாண்டவர்களுக்குத் தெரியாமல் கடும் விரதங்களை அனுசரித்தான். சாப்பாட்டைக் குறைத்தும் வேறு விதங்களினால் உடலை வருத்திக்கொண்டும் வந்தான். காந்தாரியும் அவ்விதமே செய்தாள் என்று சொல்ல வேண்டியதில்லை. பிறகு ஒரு நாள் தர்ம புத்திரரை அழைத்து அவரிடம் திருதராஷ்டிரன் இவ்வாறு சொன்னான் :—

"பிள்ளாய்! உனக்கு க்ஷேமமுண்டாகுக! நான் உன்னால் நன்கு பாலிக்கப்பட்டுப் பதினைந்து வருஷம் உன் வீட்டில் சுகமாக வசித்து வந்தேன். தானங்களைக் கொடுத்தேன், சிராத்தங்களையும் செய்தேன். புத்திரர்களை இழந்த இந்தக் காந்தாரியும் உள்ளத்தை ஸ்திரப்படுத்திக் கொண்டு தன் துக்கத்தை மறந்து என்னைக் கவனித்து வந்தாள். திரௌபதிக்குப் பெரிய அபகாரம் செய்தவர்களும் உன்னுடைய பிதுரார்ஜிதத்தைக் கவர்ந்தவர்களுமான என்னுடைய கொடிய மக்கள் அவர்களுடைய அதர்மத்தினால் மாண்டார்கள். அவர்கள் யுத்தத்தில் புறங்காட்டாமல் கொல்லப்பட்டு வீரசுவர்க்கம் அடைந்திருக்கிறார்கள். நானும் காந்தாரியும் மறுமைக்கு வேண்டிய கடமைகளை இனிச் செய்து கொள்ள வேண்டும். உனக்குச் சாஸ்திரம் தெரியுமே, கிழிந்த துணிகளும் மரப்பட்டையும் தரித்து நான் வனம் செல்ல வேண்டும். உனக்கு நலன் வேண்டிக் கொண்டு நான் வனத்தில் வசிக்க விரும்புகிறேன். இதற்கு நீ அனுமதி கொடுக்க வேண்டும். நம்முடைய குல வழக்கத்தை நான் அனுசரிக்க வேண்டும். அரசனாகிய நீயும் என் தவத்தின் பயனில் ஒரு பகுதியை அடைவாய்."

இதைக் கேட்டு யுதிஷ்டிரன் "நீர் இவ்வாறு உபவாசமிருந்து தரையில் படுத்துத் தேகத்தை வருத்தி வந்ததை நானும் என் சகோதரர்களும் அறியவில்லை. நீர் சுகமாக இருப்பதாகவே நான் வஞ்சிக்கப்பட்டேன். என்னுடைய பிதாவான நீர்

ஆறாத துக்கத்தை அடைந்தீர். எனக்கு ராஜ்யத்தாலும் போகங்களாலும் என்ன பயன்? நான் மிகவும் கெட்டவன். ராஜ்யத்தில் ஆசை கொண்டு நான் தவறு செய்தேன். உம்முடைய புத்திரன் யுயுத்ஸு ராஜாவாக இருக்கட்டும். அல்லது வேறு எவனை நீர் விரும்புகிறீரோ அவன் ராஜாவாக இருக்கட்டும். அல்லது நீரே ராஜாவாக இருந்து இந்தத் தேசத்தைப் பரிபாலனம் செய்யும். நான் வனம் செல்லுகிறேன். நான் இதுவரையில் அடைந்த அபகீர்த்தி போதும். நீர் மறுபடியும் என்னை அபவாதத்தில் போட்டு எரிக்க வேண்டாம். நான் ராஜா அல்ல. நீர் அல்லவோ ராஜா? நான் உமக்கு எப்படி அனுமதி தர முடியும்? துரியோதனன் விஷயத்தில் இப்போது எனக்கு ஒரு கோபமுமில்லை. விதிவசத்தால் நாம் எல்லாரும் மதிமயக்க மடைய வருந்தத்தக்க சம்பவம் நடைபெற்று விட்டது. துரியோதனாதிகளைப் போலவே நாங்கள் உமக்குப் புத்திரர்கள். காந்தாரியும் குந்தியும் இருவரும் எனக்குச் சமமான அன்னைகள். நீர் வனம் சென்றால் நானும் கூடவே வருவேன். நீர் காட்டுக்குப் போன பிறகு உம்மைப் பிரிந்த எனக்கு இந்த ராஜ்யம் என்ன பிரீதி உண்டு பண்ணும்? உம்மைத் தலை வணங்கிப் பிரார்த்திக்கிறேன். உம்முடைய மனத்திலுள்ள வருத்தம் விலக வேண்டும். நான் சந்தோஷமாக உமக்குப் பணிவிடை செய்து உள்ளத்தில் சாந்தி பெறுவேன்" என்றான்.

திருதராஷ்டிரன், "குருநந்தனா! என்னுடைய மனமானது வனம் போய்த் தவம் செய்வதில் பற்றுக் கொண்டு விட்டது. நான் உன் வீட்டில பதினைந்து வருஷங்கள் இருந்து ஆயிற்று. நீயும் உன்னைச் சேர்ந்த எல்லாரும் எனக்கு நன்றாய்ப் பணிவிடை செய்தீர்கள். இப்போது எனக்கு வனம் செல்ல அனுமதி கொடுக்க வேண்டும்" என்று திருதராஷ்டிரன் நடுங்கிக் கொண்டும் அஞ்சலி செய்து கொண்டும் நின்ற தர்மராஜனுக்குக் கண்டிப்பாகச் சொன்னான். பிறகு விதுரனையும் கிருபாசாரியரையும் நோக்கி, "நீங்கள் அரசனுக்குச் சமாதானம் சொல்லி எனக்கு அனுமதி பெற்றுத் தரவேண்டும். எனக்கு வாய் உலருகிறது. வயதாகிவிட்டதல்லவா? அதிகமாகப் பேசின சிரமமாக இருக்கவேண்டும்" என்று சொல்லிவிட்டுப் பிரஜ்ஞையற்றுக் காந்தாரியின்மேல் சாய்ந்தான். இதைப் பார்த்து யுதிஷ்டிரன் தாங்க முடியாத துக்கமடைந்தான். "யானையின் பலத்தைப் படைத்த இவர், இரும்பினால் செய்யப்பட்ட பிரதிமையைப் பொடியாகச் செய்த இந்த வீரர், இவ்வாறு மனம் நொந்து, உடல்வாடி தோலும் எலும்புமாகி விட்டாரே, பிரஜ்ஞை இழந்து காந்தாரியின்மேல் அநாதையைப் போல் சாய்ந்து விழுந்து கிடக்கிறாரே! இதற்கெல்லாம் காரணம் நான் அல்லவோ? தருமம் தெரியாதவனான என்னையும் என்னுடைய புத்தியையும் நான் கற்ற கல்வியையும் நிந்திக்க வேண்டும்" என்று பரிதாபப்பட்டான். ஜலத்தை எடுத்துத் தெளித்துத் தன் குளிர்ந்த கையினால் திருதராஷ்டிரனுடைய முகத்தைத் தடவினான். திருதராஷ்டிரனுக்கு நினைவு வந்ததும், கையினால் தன்னைத் தடவிக்கொண்டிருந்த யுதிஷ்டிரனைக் கட்டி அணைத்துக் கொண்டு "அப்பனே! உன்னுடைய ஸ்பரிசம் எனக்கு அமிருதம் போல் இன்பம் தருகிறது" என்றான்.

அச்சமயத்தில் வியாசர் வந்தார். விஷயம் தெரிந்ததும் அவர், யுதிஷ்டிரனுக்குச் சொன்னார்:

"குருகுலச் சிரேஷ்டனான திருதராஷ்டிரன் எவ்விதம் சொல்லுகிறானோ அவ்விதமே செய். முதுமை அடைந்தவனும் புத்திரர்களை இழந்தவனுமான இவன் நீண்டகாலம் இந்தக் கஷ்டத்தைச் சகிக்க மாட்டான். சிறந்த ஞானம் பெற்றவளான காந்தாரி தன் சோகத்தை மிக்க தைரியமாகப் பொறுத்து வருகிறாள். என்னுடைய வார்த்தையைக் கேட்டுத் திருதராஷ்டிரனுக்கு அனுமதி கொடு. இவன் இங்கே வீணாக மரிக்க வேண்டாம். பிராஜ்ஞனான இவன் வனத்தில் தேன் மலர்களின் வாசனைக் கிடையில் கவலையற்று இருக்கட்டும். பழைய ராஜரிஷிகளின் மார்க்கத்தைப் பின் தொடர்ந்து செல்லட்டும். ராஜாக்களுக்கு இதுதான் தருமம். யுத்தத்தில் உயிரிழக்க வேண்டும், அல்லது வனத்தில் விதிப்படி ஆயுளை முடித்துக் கொள்ள வேண்டும். இவன் யாகங்களைச் செய்தான். பூமியை அனுபவித்தான். பிரஜைகளைப் பரிபாலித்தான். நீங்கள் காட்டுக்குச் சென்றிருந்தபொழுது புத்திரனுடைய ஆதீனத்திலிருந்த விசாலமான ராஜ்யத்தைப் பதின்மூன்று வருஷம் அனுபவித்தான். பலவிதமான தனத்தைத் தானம் செய்தான். நீயும் இந்தப் பதினைந்து வருஷ காலம் இவனை நன்றாகவே ஆராதித்து வந்தாய். ஒரு குறையுமில்லை. இப்போது இவனுக்குத் தவம் புரியும் சமயம். இவன் கோபத்தினால் போகவில்லை. நீ அனுமதித்து அனுப்பு" என்று யுதிஷ்டிரனைச் சமாதானப்படுத்தினார்.

"அப்படியே ஆகட்டும்" என்று தருமராஜன் சொல்லிய பின் வியாசர் தம் ஆசிரமத்திற்குத் திரும்பிச் சென்றார்.

இது என்ன கூத்து?

ஸோமாஸ்

வழக்கம்போல் சென்ட்ரல் ஸ்டேஷனுக்கு வந்து ரயிலில் ஏறி உட்கார்ந்ததும் பத்திரிகையைப் படிக்க ஆரம்பித்தேன்.

"கொஞ்சம் இருங்கள்! டிராமாக் கொட்டகைக் கூவரம் என்ன ஆயிற்று பார்க்கலாம்!" என்று கூறிக் கொண்டே குறுக்கே கையை நீட்டினார் என் பக்கத்தில் உட்கார்ந்திருந்த ஒரு மனிதர்.

அவரை அப்படியே அறையலாமா என்று தோன்றினாலும் கோபத்தை அடக்கிக் கொண்டு அவர் கேட்ட செய்தி இருந்த பக்கத்தை எடுத்து அவரிடம் நீட்டினேன். அதன் பிறகு 'புளியம்பட்டி மிராசுதார் கொலை' 'காட்டுப்பத்தூரில் நடந்த காதல் நாடகம்' 'கிழவர்களுக்கு ஒரு யோசனை' 'சைதாப்பேட்டைக் குளத்தில் கொடங்குச் சட்டம்' இப்படிப் பலதரப்பட்ட விஷயங்களையும் படித்துக்கொண்டே போனேன். 'கோழியும் கோழியும் ஏன் சண்டை போட்டுக் கொள்கின்றன? பண்டிதரும் பண்டிதரும் ஏன் சண்டை போட்டுக் கொள்கின்றனர்?' என்னும் விஷயத்தைப் பற்றி ஒரு ஆராய்ச்சி நிபுணர் எழுதி யிருந்த கட்டுரையைப் படித்துக் கொண்டிருந்தேன்.

மற்றொரு மனிதர் என்மேல் மூச்சு விட்டுக்கொண்டு என் பத்திரிகையைப் படிப்பது எனக்குப் பிடிக்கவே இல்லை. "படிக்காதே!" என்று சொல்லிவிடலாம் என்று அவர் பக்கம் திரும்பினேன்.

அவரைப் பார்த்ததும் என் ஆத்திரம் கோபம் எல்லாம் பறந்தோடி விட்டன. காரணம் அவரது கம்பீரமான தோற்றமும் பிறரை நடுங்க வைக்கும் 'ராஜு பார்ட்' மீசையுந்தான்.

அவரைப் பத்திரிகை படிக்க வொட்டாமற் செய்வதற்குக் குறுக்கு வழி ஒன்று கண்டு பிடித்தேன்.

செய்திகள் பிரசுரித்திருக்கும் பக்கங்களை யெல்லாம் தள்ளிவிட்டு 'மார்க்கெட் நிலவரம்' என்ற பக்கத்தைப் படிக்க ஆரம்பித்தேன். என்ன ஆச்சரியம்! அந்த எமகாதகர், மிளப்பு முள்ளங்கி, பச்சைப் பட்டாணிக் கடலை, எள்ளுப் பிண்ணாக்கு, வெங்காய மூட்டை என்று ஒன்றுகூட விடாமல் படித்தார்.

நான் விளம்பரங்களைப் படிக்க ஆரம்பித்தேன். இருபத்திநாலு மணி நேரத்தில் கிழவனை வாலிபனாக்கும் மருந்தைப் பற்றிய நீண்ட விளம்பரத்தைப் படித்தேன்; அவரும் அதை விடாமல் படித்தார். விவாக விளம்பரங்களைப் படித்தேன்; அவரும் படித்தார். சர்வ சித்தியையும் தரும் கவச விளம்பரங்களைப் படித்தேன்; அவரும் படித்தார். ஜோஸ்யர்களுக்கும் வைத்தியர்களுக்கும் அளிக்கப் பட்டிருக்கும் நற்சாக்ஷிப் பத்திரங்களைப் படித்தேன்; அந்தப் பொல்லாத மனிதரும் போட்டி போட்டுக்கொண்டு படித்தார்.

எனக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. அப்பொழுது என் அதிர்ஷ்டவசமாக ஒரு குறுக்கெழுத்துப் போட்டிப் பந்தயம் என் கண்ணில் தென்பட்டது. இந்த மனிதனை இத்துடன் ஒழித்து விடலாம் என்று நினைத்துப் பத்திரிகையிலேயே பென்ஸிலால் எழுத ஆரம்பித்தேன்.

"செல்வம்" என்று பொருள் கொடுக்கும்படியாய் நி...... என்று ஆரம்பித்து இரண்டு எழுத்துக்களில் முடியும் வார்த்தை ஒன்றைக் கண்டுபிடிக்க முயன்று கொண்டிருக்கும் பொழுது அவர் "நிதி" என்றார்.

எனக்குப் பிரமாதமான கோபம் வந்தது. அடக்கிக் கொண்டு பென்ஸிலால் அழுத்தி "நிதி" என்று எழுதினேன். 'டக்' என்று பென்ஸில் ஒடிந்து விட்டது. இதற்குள் பெரம்பூர் ஸ்டேஷனும் வந்துவிட்டது. பத்திரிகையை எடுத்துக் கொண்டு கிளம்பினேன்.

"ஐயா, தயவு செய்து என் பத்திரிகையைக் கொடுத்து விட்டுப் போங்கள்!" என்றார் அந்த மனிதர்.

"இது என் பத்திரிகை அல்லவா?" என்று ஆத்திரத்துடன் கேட்டேன்.

"அதெல்லாம் எனக்குத் தெரியாது. என் பத்திரிகையை இங்கே வைத்திருந்தேன். நீர் அதைக் கையில் எடுத்துக் கொண்டு உட்கார்ந்தீர். உமது பத்திரிகை ஒருவேளை உமது பையிலேயே இருக்கலாம்!" என்றார்.

தேடிப் பார்க்கவேண்டிய அவசியமே ஏற்படவில்லை. என் பத்திரிகை என் பையிலேயே பத்திரமா யிருந்தது.



பார்வதியின் ஆவி

நாபன்

சென்னை 'விக்டோரியா' ஆஸ்பத்திரி 'பிரசவ வார்டி'ல் ஓர் இரும்புக் கட்டிலில் படுத்த வண்ணம் புரண்டு கொண்டிருந்தாள் சரஸ்வதி. இரத்தம் இல்லாமல் அவள் உடம்பு வெளிறிப் போய் மெலிவடைந்திருந்தது.

அந்த வார்டின் டாக்டரான ரங்கநாயகி அம்மாள் தினசரி நாலைந்து தடவை வந்து நோயாளிகளைப் பார்வையிடுவாள். அன்று அவள் சரஸ்வதியின் அருகில் வந்ததும், "அம்மா! நீதான் மருதூர் முதலியாரின் மனைவியா? உன்னை நன்றாகக் கவனித்துப் பார்க்க வேண்டும் என்று உன் கணவர் என்னிடம் தெரிவித்திருக்கிறார். பயப்படாதே! இன்னும் இரண்டு நாட்களில் ஓர் அழகான ஆண் குழந்தைக்கு நீ தாய் ஆவாய்!" என்று புன்முறுவலுடன்

சொல்லிவிட்டு, சரஸ்வதியின் கன்னங்களை அன்போடு தடவிக் கொடுத்தான்.

* * *

மருதூர், காவேரிக் கரையிலுள்ள ஒரு சிறு கிராமம். அங்கே பிரசவ ஆஸ்பத்திரி கிடையாது. ஆகவே மருதூரிலிருந்து சரஸ்வதியைச் சென்னைக்கு அழைத்து வந்தார் செல்வரங்க முதலியார். வேறொரு காரணமும் இதற்கு அனுகுணமாயிருந்தது. அதாவது, சரஸ்வதிக்குக் கலியாணமான காலத்திலிருந்து அவள் பிணியும் பீடையுமாக அவஸ்தைப் பட்டுக் கொண்டிருந்தாளே யன்றி, தேக சௌக்கியமாக ஒரு நாளாவது இருந்தது கிடையாது. முதலியாருக்கு அவள் இரண்டாந் தாரம். அவருடைய மூத்த மனைவி ஏதோ குடும்பத் தகராறு காரணமாகக் காவேரியில் விழுந்து துர்மரண மடைந்தவள். அவளது ஆவியே சரஸ்வதியைத் துன்புறுத்தி வந்ததாக நினைத்தார் முதலியார். அதற்கேற்றாற் போல் சரஸ்வதியின் நோய் எந்தவித வைத்தியத்தினாலும் தீரவில்லை. சில சமயம் அவள் வெறி பிடித்தவள்போல் பார்த்தது பார்த்தபடியே திருதிருவென்று விழிப்பாள்; காரணமில்லாமல் புலம்புவாள்; புஷ்ப வாசனை, கொட்டு மேளம் இவற்றைக் கண்டால் மயக்கங் கொண்டு மூர்ச்சை யடைந்து விடுவாள்; தூக்கத்தில் திடுதிப்பென்று பதறி விழித்துக் கூச்சலிடுவாள். மந்திர தந்திரங்கள்கூட அவள் விஷயத்தில் பயனற்றுப் போய் விட்டன. ஆகவே, இடம் விட்டு இடம் மாறினாலும் ஒருவேளை சரஸ்வதியின் உடம்பு குணமாகலாம் என்பது முதலியாரின் எண்ணம்.

சரஸ்வதிக்கு இரண்டு மூன்று தடவை கருதரித்திருந்து சிதைந்து விட்டது. இதற்கெல்லாம்கூட முதலியாரின் மூத்த மனைவியான பார்வதியின் ஆவிதான் காரணம் என்று ஊரார் சொன்னார்கள். அவர்கள் சொன்ன பிரகாரம் பார்வதியை நினைத்துப் புதுப் புடவை வாங்கிப் பொங்கலிட்டுப் பூஜை நடந்தது. அன்று இரவு பார்வதி கனவில் தோன்றி, "நான் சரஸ்வதியைக் காப்பாற்றுகிறேன்; அவளுக்குக் குழந்தை பிறந்ததும் என் பெயரை வைக்க வேண்டும்!" என்று முதலியாரைக் கேட்டுக் கொண்டாளாம். அதன்படியே பிறக்கும் குழந்தைக்குப் பார்வதியின் பெயரை இடுவதாகவும், அவளைக் குலதெய்வமாகத் துதிப்பதாகவும் தீர்மானம் செய்த பிறகுதான் இந்த ஒன்பது மாதங்களாக யாதொரு விக்னமுமில்லாமல் சரஸ்வதி நிறை கர்ப்பிணியாக இருந்தாள்.

ஆஸ்பத்திரிக்கு அருகாமையிலுள்ள ஒரு தெருவில் வீடு அமர்த்திக் கொண்டு இருந்தார் முதலியார். தினந்தோறும் மாலையில் வந்து சரஸ்வதியைப் பார்த்துவிட்டுச் செல்வார். அவளுக்கு வேண்டிய பால், பழம், கஞ்சி முதலிய ஆகாரங்களை வேளா வேளைக்கு அனுப்புவார். ஆஸ்பத்திரிச் சிப்பந்திகளுக்கும் அவ்வப்போது பழங்களும் காசும் கொடுத்து உற்சாகப் படுத்துவார்.

முதலியாரது குடும்ப வாழ்க்கையே வெகு விசித்திரமானது. செல்வத்தில் பிறந்து செல்வத்திலேயே வளர்ந்து வந்தவர்; அவரது மனைவி பார்வதி உயர்ந்த குடும்பத்தைச் சேர்ந்தவள்; படித்தவள். பொறுமையும் கண்ணியமும் வாய்ந்தவள். ஆனாலும் விதி என்று ஒன்று இருக்கிறதல்லவா? அது முதலியாருக்கும் அவர் மனைவி பார்வதிக்கும் ஆகாதபடி செய்துவிட்டது.

பார்வதி சற்றுக் கறுப்பு நிறம். முதலியாரின் வேட்கை மிகுந்த வாலிபக் கண்களுக்கு அவள் பிடிக்கவில்லை. செல்வச் செருக்கிலே, வாலிப எக்காளத்திலே முதலியார் பலவித துன்மார்க்க லீலைகளில் இறங்கினார். இரவு வெகு நேரம் கழித்து வீட்டுக்கு வருவார். பார்வதி அன்போடு அவருக்குப் பால் கொண்டு வந்தால் கோபத்தோடு டம்ளரை வாங்கி அவள் மீது வீசி எறிவார்.



அவருக்கு இன்பமூட்ட நினைத்து அழகான பட்டுக்களாலும் நகைகளாலும் புஷ்பங்களாலும் தன்னை அலங்கரித்துக்கொண்டு அவர் எதிரே வந்து நிற்பாள் பார்வதி. முதலி

யாருக்கு அவளைப் பார்க்கவே வேம்பாகக் கசக்கும். "மூதேவி! மூகரக் கட்டையைப் பார், கரி மாதிரி!" என்று எரிந்து விழுவார்.

ஒருநாள்—அதுதான் பார்வதியின் இறுதி வாழ்நாள்—முதலியார் மாடியில் ஏக தடபுடலாக இருந்தார். யாரோ ஒரு பெண் குரலும் இடையிடையே கேட்டது. பார்வதி இதைக் கவனித்தாள். என்ன நடக்கிறது என்று பார்க்க விரும்பி, சத்தமில்லாமல் படிகளில் ஏறி மாடிக் கதவருகில் நின்று காது கொடுத்துக் கேட்டாள்.

"மேனகா! இனிமேல் நான் உன்னைத் தேடிக்கொண்டு அங்கே வரமுடியாது. நீ தான் தினமும் இங்கே வந்துவிடவேண்டும்!"

"முடியாது! அவள் இங்கே இருக்கிறாள்!"

"யாரைச் சொல்கிறாய்? பார்வதியையா? சனியனைத் தொலைத்துத் தலைமுழுகினால் போச்சு!"

அதற்குமேல் பார்வதியால் கேட்டுக் கொண்டிருக்க முடியவில்லை. "என்ன சொன்னீர்கள்! என்னைத் தொலைத்துத் தலை முழுகவா? இப்போதே என் கழுத்தை நெரித்து என்னைக் கொன்றுவிடுங்கள்!" என்றாள் பார்வதி. அவள்மீது குபீரென்று பாய்ந்தார் முதலியார். மறுகணம் மாடிப் படிகளில் கடகடவென்று உருண்டு கீழே தரையில் சுருண்டு விழுந்தாள் பார்வதி.

2

அன்றிரவு பார்வதியை அந்த வீட்டில் காணவில்லை. வீடெங்கும் தேடினார்கள். தோட்டத்திலும் கிணறுகளிலும் விளக்குகளைக் கொண்டு தேடினார்கள். அப்போது மேஜைமீதிருந்த ஒரு கடிதம் முதலியாரின் கண்ணில் பட்டது.

"அன்பில்லாத பிராணபதிக்கு,

தாங்கள் என்னைப் பரிபூரணமாக வெறுக்கிறீர்கள். என்னால் உங்களுக்குச் சுகமில்லை; இன்பமில்லை! தங்கள் மனதுக் கிசைந்த பெண்ணுடன் சந்தோஷமாக வாழ்வதற்கு நான் தடையாக இருக்கிறேன். இதைத் தங்கள் வாயிலிருந்தே தெரிந்துகொண்டேன். இனியும் தங்களைத் தொந்தரவு செய்ய நான் விரும்பவில்லை. இந்தக் கடிதம் தங்கள் பார்வைக்கு வருமுன் நான் காவேரி வெள்ளத்தில் ஆழ்ந்திருப்பேன். இந்த அபலையின் உயிரற்ற உடலைக்கூட நீங்கள் பார்த்து அருப்படைய வேண்டாம்!

இப்படிக்கு,
பார்வதி."

பார்வதியின் பரிதாப மரணச் செய்தி ஊரெங்கும் பரவியது. எல்லோரும் முதலியாரை நிந்தித்தனர். நாளடைவில் காவேரியின் அரசடிப் படித்துறையிலும் கரையோரங்களிலும் பார்வதியின் ஆவி உலாவி வருவதாகவும், அந்தி மயங்கிய பிறகு அங்கே வரும் பெண்களையும் குழந்தைகளையும் அது பயமுறுத்துவதாகவும் பலமான வதந்தி பரவவே, அஸ்தமனத்துக்குப் பிறகு அந்த நதிக்கரை ஓரங்களில் ஜன நடமாட்டமே இல்லாமல் போய்விட்டது. இரவும் பகலும் நதிக்கரையிலேயே சஞ்சரிக்கும் செம்படவர்கள் சிலர், பார்வதியின் ஆவியைத் தாங்கள் நேரில் கண்டதாகவும், அது 'விடாதே! பழி வாங்கு!' என்று அலறுவதாகவும், சில வேளைகளில் ஓலமிட்டுக் கொண்டு ஓடி வருவதாகவும் சொன்னார்கள். நாளடைவில் அந்த அரசடிப் படித்துறைக்கு 'பார்வதி படித்துறை' என்றே பெயர் வழங்க ஆரம்பித்துவிட்டது. ஊரிலே ஏதாவது சுப காரியங்கள் நடந்தாலும் சரி, பெண்கள் அசௌகரியமாயிருந்தாலும் சரி, அந்தப் படித்துறை அரசமரத்தடியில் பார்வதியை நினைத்துப் பொங்கல் வைப்பார்கள். மரத்திற்கு மஞ்சள், குங்குமம் இட்டு மாலைகள் சார்த்தி, கற்பூரம் காட்டி, "பார்வதியே! உன் கோபம் தணியட்டும் தாயே!" என்று வணங்குவார்கள்.

ஊருக்கே தேவதையாகிவிட்ட பார்வதியின் ஆவி முதலியாரை மட்டும் சும்மா விடுமா? ஒரு நாள் அவர் கனவில் தோன்றி, "நீங்கள் மறுபடியும் கல்யாணம் செய்து கொள்ளுங்கள்!" என்றது. அதன்படியே தான் முதலியார் சரஸ்வதியை இரண்டாந் தாரமாக மணந்து கொண்டார். ஆனால், தன்னைப் பழி வாங்குவதற்காகவே பார்வதி மறுமணம் செய்து கொள்ளச் சொன்னாள் என்பதை முதலியார் பின்னால்தான் உணர்ந்தார்.

3

அன்று முழுவதும் முதலியாருக்குப் பார்வதியின் நினைவாகவே இருந்தது. "நீதான் சரஸ்வதியைக் காப்பாற்ற வேண்டும். உன் அருளால் அவள் யாதொரு கஷ்டமுமில்லாமல் தாயும் குழந்தையுமாகப் பெற்றுப் பிழைத்து வரவேண்டும்!" என்று வேண்டிக் கொண்டார்.

இவ்வாறு அவர் வேண்டிக் கொண்டிருக்கும் போதே ஆஸ்பத்திரியிலிருந்து ஓடோடியும் வந்த வேலைக்காரன், "எசமான்!

ஆண் குழந்தை பிறந்திருக்கு; தாயும் குழந்தையும் சுகமா யிருக்காங்க!" என்றான்.

முதலியார் மட்டற்ற மகிழ்ச்சியோடு வெற்றிலை, பாக்கு, பழம், ஜாதிக்காய், ஏலக்காய், கற்கண்டு இவற்றுடன் ஆஸ்பத்திரிக்குச் சென்றார். டாக்டர் ரங்கநாயகியின் முன் அவற்றை யெல்லாம் வைத்துத் தன் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொண்டார்.

டாக்டர் அம்மாளுக்குச் சிரிப்பு வந்தது. "என்ன, முதலியார்வாள்! இதெல்லாம் யாருக்கு? ஓஹோ! ஒரு வேளை இப்போது பிறந்திருக்கும் உங்கள் பையனுக்குப் பெண் பார்த்துக் கொண்டு வந்துவிட்டீர்களோ?— போகட்டும்; ஆனால் பார்வதியைப் போல் அழகில்லாத பெண்ணைப் பார்த்து விடாதீர்கள்! ஆமாம்; எல்லாவற்றையும் சாசா என்னிடம் ஆதியோடந்தமாகச் சொன்னாள் — ஒரு நாள் நடு நிசியில் அவள் என்ன வெல்லாமோ உளறிக் கொண்டிருந்தாள். நான் அவளை எழுப்பி, "என்ன?" என்று கேட்டேன். பயத்தால் உடம்பெல்லாம் வியர்த்துக் கொட்டிக் கொண்டிருந்தது. அன்றுதான் சொன்னாள் பார்வதியைப் பற்றி!" என்று புன்முறுவலுடன் கூறி, தட்டிலிருந்து ஒரு கற்கண்டுத் துண்டை மட்டும் கையில் எடுத்துக் கொண்டாள்.

"சரஸ்வதி இதையெல்லாம் இந்த டாக்டர் அம்மாவிடம் சொல்லித் தொலைக்கிறாள்!" என்று நினைத்துச் சிறிது வெட்கமடைந்தார் முதலியார்.

"இதுவரை தங்களுக்கும் சரஸ்வதிக்கும் தொந்தரவு கொடுத்த பார்வதி, இந்தக் குழந்தையை ஒன்றும் செய்யாமலிருக்க வேண்டுமே! — என்ன முதலியார்வாள்! என்ன சொல்கிறீர்கள்?" என்று கூறிக் கலகலவென்று சிரித்தாள் ரங்கநாயகி.

"டாக்டர்கள் படித்தவர்கள்! எதையும் லேசாகப் பேசி அலட்சியம் செய்து விடுவார்கள்! — இந்த வம்பெல்லாம் இவர்களுக்கு எதற்கு? பேசாமலிருந்தால் என்ன? இதெல்லாம் நம்மால்தானே வந்தது!" என்று தன்னைத்தானே நொந்து கொண்டாள் சரஸ்வதி.

4

ஒரு நாள் வழக்கம்போல் சரஸ்வதியைப் பார்க்க வந்திருந்த முதலியாரை நோக்கி, "என்ன, முதலியார்வாள்! நான் சொல்கிறேனென்று கோபப்படக் கூடாது. இன்று சாசா இவ்வளவு துர்ப்பலமா யிருப்பது உங்களால்தானே?" என்று கேட்டாள் டாக்டர் ரங்கநாயகி.

முதலியாருக்கு ஒன்றும் சொல்லத் தோன்றவில்லை. ஏதோ ஒரு பெரிய தாக்குதலை எதிர்பார்த்து அவர் மனம் தத்தளித்துக் கொண்டிருந்தது.

"அவரை ஒன்றும் சொல்லாதீர்கள்; எல்லாம் என் தலைவிதி!" என்றாள் சரஸ்வதி.

"அதற்காகச் சொல்லவில்லை. உனக்கு முதன் முதலில் அசௌக்கியம் ஏற்பட்டதுமே ஏன் இங்கு உன்னை அழைத்து வந்திருக்கக் கூடாது? 'பேய்' என்றும் 'ஆவி' என்றும் வீணான அபவாதங்களை நம்பி பலியாகப் பார்த்தாயே!"

"அப்படிச் சொல்லி விடாதீர்கள், அம்மா! என் சொந்த அனுபவத்திலிருந்து சொல்கிறேன்!" என்று ஏதோ சொல்ல வாயெடுத்த முதலியாரை மறித்து, "நிறுத்துங்கள்!—என்ன சொல்வீர்கள் என்று எனக்குத் தெரியும். பேயையும் பிசாசையும் நேரிலேயோ அல்லது கனவிலேயோ கண்டதாகச் சொல்லப் போகிறீர்கள். அவ்வளவுதானே? மீண்டும் நான் சொன்னதையே திரும்பவும் சொல்கிறேன். சாசாவின் பலஹீனமான நிலைமைக்கு நீங்கள்தான் காரணம். சரஸ்வதி படித்தவளாயிருந்திருந்தால் வீணான மனப் பிராந்திகளில் மனதைச் செலுத்துவாளா? இரண்டு மூன்று தரம் கருவற்றுச் சிதைந்ததே, எதனால்? சந்தேகமென்ன? பலஹீனத்தால்! கோழை மனத்தால்! —என்ன, முதலியார்! உங்கள் அபிப்பிராயம் என்ன?" என்றாள்.

இந்தச் சமயத்தில் குழந்தை வீறிட்டு அழுதது. டாக்டர் அம்மாள் எழுந்து குழந்தையை எடுத்து அன்போடு முத்தமிட்டாள். பக்கத்திலிருந்த புட்டிப் பாலை எடுத்துக் குழந்தைக்குக் கொடுத்தாள். பிறகு, "படுத்துக் கொள், கண்ணே!" என்று படுக்க வைத்தாள்.

"நான் எடுத்துக் கொள்வேனே, அம்மா! நீங்கள் ஏன் சிரமப்படுகிறீர்கள்?" என்றாள் சரஸ்வதி.

"சிரமமா! இன்பமல்லவா இது? இந்தப் பேரானந்தம் கிடைக்காமல் எத்தனை கோடிப் பாப ஜீவன்கள் ஏங்கித் தவம் கிடக்கிறார்கள்?" என்று சொல்லும்போது டாக்டர் அம்மாளின் கண்களில் நீர் நிறைந்து நின்றது.

"அது கிடக்கட்டும்; ஏதோ சொல்லிக் கொண்டிருந்தேனே, முதலியார்வாள்!

சாசா சொன்னதிலிருந்து தங்கள் வரலாறு முழுவதும் எனக்கு நன்றாகத் தெரிந்து விட்டது. அதிலும், உங்கள் முதல் மனைவி பார்வதியைப் பற்றி நினைக்க நினைக்க என் மனதை என்னவோ செய்கிறது! ஆனால் அவள் தற்கொலை செய்து கொண்டது தவறு என்பது என் அபிப்பிராயம். பிராணனை மாய்த்துக் கொள்வது பேடித்தனமல்லவா? அவள் நிலைமையில் நான் இருந்திருந்தேனானால், எந்த விதமான கஷ்டத்தையும் எதிர்த்து நின்றிருப்பேன். தனித்து நின்று போராடியிருப்பேன். கேவலம் க்ஷணத்துக்கு க்ஷணம் மனம் மாறுகின்ற காமாந்தகாரன் ஒருவனது நிதானமற்ற கோபத்துக்காக உயிரையே பலி கொடுத்திருக்க மாட்டேன்!—என்ன சொல்கிறீர் முதலியார்வாள்?" என்று மீண்டும் தொடர்ந்து கேட்டாள் டாக்டர் அம்மாள்.

"அம்மா! அதைப் பற்றியெல்லாம் இப்போது எதற்குப் பேசவேண்டும்? உங்கள் அருளால் என் சாசாவும் குழந்தையும் பிழைத்தார்கள். எங்களை ஆசீர்வதித்து அனுப்புங்கள்!" என்று முதலியார் பேச்சை மாற்ற முயன்றார்.

"உங்கள் மனதைப் புண்படுத்துவது என் நோக்கமல்ல. ஆனால் இனிமேலும் பார்வதியின் ஆவியும் நினைவும் தங்களை ஒன்றும் செய்யாமலிருக்க வேண்டுமே என்று தான் சொல்கிறேன். பேய்கள் உண்டா இல்லையா என்ற விவாதம் நமக்குத் தேவையில்லை. ஆனால், நீங்கள் சொல்வதுபோல் பார்வதியின் ஆவி உங்களைச் சுற்றிச் சஞ்சரித்துக் கொண்டிருப்பதாகவே வைத்துக் கொள்வோம். அந்த ஆவி உங்களுக்கு என் இடைஞ்சல் செய்ய வேண்டும்? தங்களுடைய க்ஷேமத்தை நாடி அல்லவா அவள் தற்கொலை செய்து கொண்டாள்? அப்படித் தானே தன் அந்திய காலத்துக் கடிதத்திலும் எழுதியிருந்தாள்? ஒருவேளை அவள் உயிரோடிருந்திருந்தாலும் சொன்ன வார்த்தையிலிருந்து மாறியிருக்கலாம். சொன்ன சொல்லை மீறுவது மனிதர்களுக்கு இயற்கை! ஆனால் கொடுத்த வார்த்தையை மீறுவது பேய்களிடத்திலும் உண்டு என்று உங்களுக்கு யார் சொன்னது?—மந்திரவாதியைக் கேட்டீர்களா?—பேய்கள் எல்லாம் சத்தியத்துக்குக் கட்டுப்படுவதாக அல்லவா நான் படித்திருக்கிறேன்?" என்றாள் அவள் கேலியும் சிரிப்புமாக.

இந்தச் சமயத்தில் தபால்காரன் ஒரு கவரை டாக்டர் அம்மாளிடம் கொடுத்து விட்டுப் போனான். கடிதத்தை ஆவலுடன் உடைத்துப் படித்துவிட்டு மறுபடியும் பேச்சை ஆரம்பித்தாள் ரங்கநாயகி.

"முதலியார்வாள்! இந்தக் கடிதம் என் சிநேகிதி டாக்டர் லீலாவதி என்பவளிடமிருந்து வந்திருக்கிறது. அவள் தஞ்சாவூரில் நல்ல 'பிராக்டிஸ்' செய்து கொண்டிருக்கிறாள்—ஆம்; நல்ல சமயத்தில் லீலாவதியின் கடிதம் வந்தது. அவளைப் பற்றி உங்களுக்குத் தெரிந்திருக்காது. பத்து வருஷங்களுக்கு முன் ஏறக்குறையப் பார்வதியின் நிலைமையில்தான் அவளும் அடிமையாயிருந்தாள். பிரம்மதேவன் அவளைக் கறுப்பாகவும் அவலக்ஷணமாகவும் படைத்து விட்டான். லீலாவின் அழகு அவள் கணவன் கண்களுக்குப் பிடிக்கவில்லை. மணப் பந்தலிலேயே அவன் தன் அருவருப்பைக் காட்டிக் கொண்டானாம். அவள் கையைப் பிடிக்கக் கூட மறுத்து விட்டானாம். எனவே, சில நாட்களுக்கெல்லாம் லீலா தன் தாய் வீட்டுக்குத் திரும்பி வந்துவிட்டாள். அவளை வாழாவெட்டி என்றும், அபாக்கியவதி என்றும் ஊராரும் உறவினரும் ஏசினார்கள். 'ஏன் பிறந்தோம்?' என்று தோன்றியது அவளுக்கு. அதோடு, லீலாவதியின் கணவன் அதிசீக்கிரமாகவே வேறொரு பெண்ணை மணந்து கொண்டதாக வதந்தி.

"இந்தத் தொல்லைகளையெல்லாம் தடுப்பதற்கு ஒரே ஒரு வழிதான் லீலாவுக்குத் தோன்றியது. பாவம்! காவேரியின் புது வெள்ளம் அவளை 'வா வா' என்று அழைத்தது. பார்வதியைப் போலவே அவளும் இறங்கினாள். வெள்ளம் அவளை உருட்டிக் கொண்டு சென்றது. ஆனால் பார்வதியைக் கொன்ற விதி லீலாவதியைக் கொல்லவில்லை. காவேரித் தாய் கருணை காட்டினாள். லீலாவதியின் உடல் வெகு தூரத்துக்கு அப்பால் ஒதுக்கப்பட்டுக் கிடந்தது. அங்குள்ள கிராமத்து ஜனங்கள் எல்லோரும் நதிக்கரையில் ஒதுங்கிக் கிடந்த பிரேதத்தைச் சுற்றி ஒரே கூட்டமாய் நின்றனர்.

"அப்போது ஒரு கிழவன் மற்றவர்களையெல்லாம் விலக்கிக்கொண்டு அங்கே வந்தான். அந்தப் பிரேதத்தின் அருகில் உட்கார்ந்து அதன் கைகளையும் நாசியையும் நன்றாகப் பார்த்து விட்டு, 'உயிர் இருக்கிறது; பிழைத்துக் கொள்ளும்' என்றான். உடனே மற்றவர்கள் உதவியுடன் அந்த உடலை அருகிலிருந்த வண்டியினருகில் கொண்டு போனான். சக்கரம் மேலே இருக்குமாறு வண்டியைத் திருப்பிப் போட்டான். அந்த உடலைச் சக்கரத்தோடு கட்டி வேகமாகச்

ற்றினான். பிரேதத்தின் வாயிலிருந்து குடக்குடமாக ஜலம் வெளியே வந்தது. உடனே கணப்பு மூட்டி உடம்புக்குச் சூடேற்றினான். பிரேதம் கண்களைத் திறந்தது; அசைந்தது. கதையை வளர்த்து வானேன்? லீலாவதி பிழைத்துக் கொண்டாள். 'ஆம், கடவுள் எதற்காகவோ நம்மைப் பிழைக்க வைத்திருக்கிறார்! இனி சாகும் எண்ணம் கூடாது; நமக்குச் சாவே கிடையாது!' என்று தீர்மானம் செய்து கொண்டாள்.

"அந்த நாட்களில் லீலாவதி பட்ட கஷ்டங்களை யெல்லாம் நான் கேட்டுக் கண்ணீர் வடித்திருக்கிறேன். அதை யெல்லாம் இப்போது சொல்லப் போவதில்லை. கடைசியாக நடந்ததைச் சொல்கிறேன். சென்னையை யடைந்து பல நாட்கள் அனாதை போல் அலைந்தாள். கடைசியில் 'சாரதா வித்யாலய'த்தில் வேலைக்கு அமர்ந்தாள். அங்கேயே படித்தாள். அந்த வித்தியாலய உபகாரச் சம்பளத்துடன் வைத்தியக் கலாசாலையிலும் சேர்ந்து வாசித்தாள். பழைய நினைவுகளைத் தவிர்க்க வேண்டித் தன் முழு மனத்தையும் முழு நேரத்தையும் படிப்பில் செலுத்தியதால் இப்போது இந்த நிலையிலிருக்கிறாள்!

"அநியாயமாக மாண்ட பார்வதி எங்கே? தினசரி நூற்றுக்கணக்கான உயிர்களைக் காப்பாற்றும் லீலாவதி எங்கே? அம்மா, சரஸ்வதி! நீயாவது தைரியத்துடன் வாழ்க்கையை நடத்து. பார்வதியைப் போல் கோழையாயிராதே! லீலாவதியைப்போல் திடமாயிரு. முதலியார்வாள்! எதையெல்லாமோ சொல்லிக் காலத்தைக் கடத்திவிட்டேன். என் கெட்ட சுபாவம் இது. சரஸ்வதியுடன் சில நாட்கள்தான் பழகினேன். ஆனாலும் எத்தனையோ யுகங்கள் அவளுடன் நெருங்கிப் பழகியதுபோலிருக்கிறது. சரசு! உன் குழந்தைக்கு ஆயுசு நூறு! எல்லோரும் போய் வாருங்கள். ஆண்டவன் எப்போதும் உங்களை ரட்சிப்பான்!" என்று அன்புடன் அவர்களை வாழ்த்தி வழியனுப்பினாள் டாக்டர் அம்மாள்.

அன்பும் நன்றியறிதலும் பொங்கிய முகத்துடன் டாக்டர் அம்மாளை வாழ்த்திவிட்டு முதலியார் தம் மனைவியுடனும் குழந்தையுடனும் ஊர் திரும்பினார்.

* * *

இரண்டு மாதங்களுக்குப் பிறகு டாக்டர் ரங்கநாயகியிட மிருந்து சரஸ்வதிக்கு ஒரு கடிதம் வந்தது.

பீல்டு ஆம்புலன்ஸ் யூனிட்,
தென் கிழக்கு ஆசியப் போராங்கம்.

அன்புள்ள சரஸ்வதிக்கு,

உனக்கும் உன் செல்வப் புதல்வனுக்கும் அநேக ஆசீர்வாதம். உங்களைப் பிரிந்தது முதல் என் மனம் நிம்மதியை இழந்தது. சில சமயம் உடனே புறப்பட்டு உன்னையும் உன் கண்ணான கண்மணியையும் பார்க்க வேண்டும் போலத் தோன்றும். என்னவென்னமோ விவரிக்க முடியாத சஞ்சலங்களெல்லாம் என் இதயத்தில் தோன்றி என்னை வதைக்கும். ஒரு டாக்டருக்கு உதவாத இந்த மனச் சஞ்சலங்களைக் கண்டு நானே திகைத்துப் போனேன். அதனாலேயே தான் யுத்த சேவைக்கு வருவதாக எழுதி யனுப்பினேன். உடனே உத்தரவு வரவே இப்போது போராங்கத்தில் சேவை செய்து வருகிறேன்.

என்னைச் சுற்றிலும் எத்தனை போர யுத்த வீரர்கள்—காயமடைந்தவர்கள் — கை ஒடிந்தவர்கள் — கண்கள் சிதைந்தவர்கள் — சிகிச்சை பெற்று வருகின்றனர். பீரங்கியின் முழக்கமும் வெடிகுண்டின் அதிர்ச்சியும் சர்வ சாதாரணமாக இங்கே கேட்கும். யுத்த களத்தில் மடிந்தவர்களுக்குக் கணக்கேது? சரசு! இந்த ரணகளத்திலே சேவை புரியும் போதும் எனக்கு உன் நினைவு வருகிறது. ஆம்; மலை மலையாக இங்கே குவிந்து கிடக்கும் அத்தனை பிரேதங்களின் ஆவிகளும் பேய்களாகத்தானே இருக்க முடியும்? — பார்வதியைப் போல இவர்களும் இயற்கைக்கு விரோதமாக மரணமடைந்தவர்கள்தானே? இவர்கள் எல்லோருடைய ஆவிகளும் பூலோகத்தின் மீது படையெடுத்தால்?......

சரஸ்வதி! உன் குழந்தை வுள்ளமும் நம்பிக்கையும் இன்னமும் என் மனதை உருக்குகின்றது. இன்னமும் நீ இந்த விதமாக நம்பி ஏமாற வேண்டாம். இதை உன் கணவரிடம் சொல்லு; ஊராரிடமும் சொல்லு. லீலாவதியின் கதையை உங்களுக்குச் சொன்னேனே, அதில் உண்மையைச் சிறிது திரித்தும் மாற்றியும் என் மனம் போன போக்கில் சொன்னேன்! — உண்மையில் அதுதான் பார்வதியின் வரலாறு! — உன் மூத்தாள் பார்வதி இறக்கவு மில்லை; பேயாகவு மில்லை! — சரசு! நீ நம்புவாயா? — நான்தான் பார்வதி! உன்னையும் உன் கணவரையும் மன அமைதி யிழந்து தவிக்கச் செய்த 'ஆவி'யான பாவி நான்தான். உன் கணவரை ஆஸ்பத்திரியில் கண்டதும் நான் பிரமித்துப் போய்விட்டேன். நல்ல வேளையாக என்னை அவருக்கு அடையாளம் கண்டு கொள்ள முடியவில்லை. உன் கோழை இருதயம் இன்னும் 'ஆவி' யென்றும் பேயென்றும் சஞ்சலப்படக் கூடாதென்றுதான் இந்தக் கடிதத்தை எழுதினேன்.

சரஸ்வதி! என் மனம் இப்போது சாந்தியடைந்து விட்டது. பத்து வருஷங்களுக்கு முன்பு, அங்கே — அதாவது, இப்போது உன்னுடைய வீட்டில் இருக்கும் பெரிய மரப் பெட்டியில் என் கையால் பின்னிய பனிக் குல்லாயும், நான் வாங்கி வைத்திருந்த பாச்சிப் பொம்மைகளும் வெள்ளிப் பாலாடையும் இருக்கின்றன. அவற்றை எடுத்து உன் கண் மணிக்குக் கொடு. நீயும் உன் கணவரும் என்னை மறந்து மன்னித்து விடுங்கள் உன் கண்மணிக்கு என் ஆசியும் முத்தங்களும் கோடி கோடி.

இப்படிக்கு,
சகோதரி ரங்கநாயகி.


SUNSHINE
Glaxo
ஸன்ஷைன் கிளாக்ஸோ
இந்தியாவில் டிஸ்ட்ரிப்யூட்டர்கள் :
எச். ஜே. பாஸ்டர் அண்ட் கோ., லிட்.
பம்பாய் - கல்கத்தா - மதராஸ் - லாகூர்
குழந்தைகளை
புஷ்டியாக
வளர்க்கிறது


சகலவிதமான வலிகளும் மாயமாய்
மறைந்து விடும்!
ஸாரிடோன்
மாத்திரைகள் சாப்பிட்ட
பத்தே நிமிஷங்களில்



நீங்கள் சாப்பிடும் ஒவ்வொரு
பதார்த்தமும் ஊக்கம்
அளிக்கின்றனவா?
The DALDA COOK BOOK
DALDA VANASPATI
Dept. 1133 P.O. B
No. 353 Bombay
டால்டா
ஊக்கமளிக்கிறது



Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press.
116-119, Sladens Garden, Poonamalle High Road, Kilpauk, Madras.

கல்கி



ALKI ஏப்ரல் 21, 1946 4 அண



இந்த
நர்ஸ்
கூறுகிறார்

"டாக்டரின் கவனத்துக்குக் கொண்டு வர வேண்டிய அவசியமே இல்லாத ஆயாஸம், அஜீர்ணம், மற்றும் இதர வயிற்றுக் கோளாறுகளுக்கு நான் எப்பொழுதும் 'பிஸ்மாக்'ஐ (பைசுரேடெட் மெக்னீஷியா) சிபார்சு செய்கிறேன்." பௌடராகவோ, பில்லைகளாகவோ சாப்பிடுவதற்கு சுலபமாகவும் ருசியாகவும் இருக்கும். தற்கால அறுவறுப்பான சாப்பாட்டிற்குப் பிறகு உட்கொண்டால், பிற்பாடு எவ்வித கோளாறுகளும் ஏற்படாது என்பது திண்ணம். உங்களது மருந்து வியாபாரிகளிடமாவது கடைக்காரர்களிடமாவது 'பிஸ்மாக்' கேளுங்கள்.

'பைசுரேடெட்' மக்னீஷியா

BISMAG

REGD TRADE MARK

பிஸ்மாக் லிமிடெட்

ப்ராய்டன் ரோடு, லண்டன், N. 16

வெஜிடபில் கதம்ப ஊறுகாய்



வெள்ளரிக்காய், இஞ்சி, பாவக்காய், கீரைத்தண்டு, வாழைத் தண்டு, கத்தரிக்காய், பச்சை மிளகாய், பச்சை மிளகு — சொல்லும்போதே வாயில் ஜலம் ஊறுகிறது — முதலியவை சேர்த்து கைபடாமல் ஜிஞ்ஜாமிருதமாகத் தயாரிக்கப்பட்டது. வாய்க்கு வெகு ஜோர். உடம்பிற்கு பரம சுகம். இன்றே உங்கள் தேவைக்கு எழுதவும். இரு சைஸ்களில் கிடைக்கும்.

தயாரிப்பவர்கள்

டி. எஸ். ஆர். & கோ.

வாஸனா திரவிய வியாபாரிகள்

கும்பகோணம்

சென்னை ஏஜெண்டுகள்

மெஸர்ஸ். புஷ்பவனம் ஸ்டோர்ஸ்

பைக்ராப்ட்ஸ் ரோடு, திருவல்லிக்கேணி

ஏஜெண்ட்

R. பாலபட்டாபி,

வைசியாள் தெரு, கோயமுத்தூர்.

Regd. No. M 4392

